Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 01 புதன்கிழமை (17.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 294

# புலிகளை அழித்தே தீருவோம்; காலஎல்லை கூற விரும்பவில்லை!

## ஜனாதிபதி மஹிந்த சொல்கிறார்



கொழும்பு, செப்டெம்பர் 17

"விடுதலைப் புலிகளை முற்றாக அழித்தே தீருவோம். அவர்களுடன் இனி சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கான எந்தச் சாத்தியங்களும் இல்லை. புலிகளை எப்போது அழித்து ஒழிப்போம் என்று கால எல்லை எதனையும் இப்போது கூற முடியாது. ஆனால், அவர்களை முற்றாக அழித்தொழிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை" - இவ்வாறு சூளுரைத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

திங்கட்கிழமை அலரிமாளிகையில் வெளிநாட்டு செய்தியாளர்களுடனான இரவு விருந்துபசார நிகழ்வின்போது அவர் இந்தக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் வடபகுதியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையில் காணப்படும் முன்னேற்றம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகளும் படைத்தளபதிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மனிதாபிமானப் பணியாளர்களை வெளியேறுமாறு தெரிவித்தமை, இராணுவம் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தப் போகின்றது என்பதற்கான அறிகுறியல்ல.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் பகுதியில் பேக்கரியில் இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், செப். 17

சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தைக்கு அண்மையாகவுள்ள பேக்கரி ஒன்றிற்குள் புகுந்து இனந்தெரியாத நபர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

காலையில் பேக்கரியில் விற்பனை நடவடிக்கை இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த இனந் தெரியாத ஒருவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமானத் தொண்டு அமைப்புகள் வன்னியிலிருந்து முற்றாக வெளியேறின

கொழும்பு, செப். 17

அரசின் உத்தரவிற்கிணங்க நேற்று ஐ.நா. தொண்டு அமைப்புகள் வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து முற்றுமுழுதாக வெளியேறின.

ஐக்கிய நாடுகளின் பணியாளர்களுடன் அவற்றின் வாகனத் தொடரணி நேற்றுக்காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டது.

11 வெளிநாட்டவர்கள் உட்பட 35 பணியாளர்களுடன் புறப்பட்ட ஐக்கிய நாடுகளின் வாகனத் தொடரணிக்கு ஓமந்தை வரை விடுதலைப்புலிகள் பாதுகாப்பு வழங்கினர்.

ஐக்கிய நாடுகளின் வாகனத் தொடரணியின் 90 நிமிடப் பயணத்திற்கு அரசிடமும் (14ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வைத்தியசாலைச் சூழலில் அதிகாலை வேளையில் ஷெல் வீச்சு!

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி வைத்தியசாலையை அண்டியுள்ள பகுதிகளில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இராணுவத்தினர் ஏவிய ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன. இதனால் அப்பகுதி மக்களும், வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளிகளும் பெரும் பீதியடைந்து பதறியடித்துக் கொண்டு ஓடினர். வைத்தியசாலையின் மாடியில் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற நோயாளிகள் அனைவரும் பாதுகாப்புக் கருதி கீழ்ப் பகுதிக்கு கூட்டிவரப்பட்டனர்.

பொழுது விடிந்ததும் நோயாளிகள் அச்சம் காரணமாகத் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டனர் எனக் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் வான் தாக்குதல் இரு குடும்பப் பெண்கள் படுகாயம்

கிளிநொச்சி,செப்.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பில் அரச வான்படையின் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் பெண்கள் இருவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பாடசாலைக்கு அருகாமையிலும், உடையார் கட்

(14ஆம் பக்கம் பார்க்க)



தியாகி திலீபனின் 21 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று வன்னியில் ஆரம்பமாகின. தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தியாகி திலீபன் திருவுருவப் படத்துக்கு தீபம்ஏற்றி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## கொழும்பு ஹேர்ட்டன் பிளேஸ் பகுதியில் பஸ்ஸில் குண்டுவெடிப்பு பயணிகள் அருந்தப்பு!

கொழும்பு, செப். 17

கொழும்பு ஹோர்ட்டன் பிளேஸ் சுற்று வட்டத்திற்கு அருகில் நேற்று மதியம் பஸ் ஒன்றினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு பேர் காயமடைந்தனர்.

மட்டக்குளியிலிருந்து மொரட்டுவ நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த 155 ஆம் இலக்க பஸ் ஒன்றிலேயே இக்குண்டு வெடித்துள்ளது.

பஸ்ஸினுள் சந்தேகத்திற்கிடமான பொதியொன்று காணப்பட்டதைத் தொடர்ந்து பயணிகள் அனைவரும் உடனடியாக,பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டனர். அதற்கு சில நிமிடங்களில் பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. பயணிகள் ஏற்கனவே வெளி

(14ஆம் பக்கம் பார்க்க)

## முறிகண்டியில் விமானத்தாக்குதல் பொதுமக்கள் மூவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, செப்.17

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி முறிகண்டி, 55ஆம் கட்டைப் பகுதி மீது நேற்று முற்பகல் 11 மணியளவில் விமானப் படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

அதேவேளை, அன்றைய தினம் காலை 6.50 மணியளவில் முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதிமீது விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர், அதிபர்களுக்கான சம்பள உயர்வுகள் அறிவிப்பு

அச்சுவேலி, செப்.17

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் புதிய சம்பள அதிகரிப்புக் குறித்து கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது. உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் சம்பள உயர்ச்சி ஒன்றும் சம்பள மறுசீரமைப்புப் படியும் மாற்றி அமைக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் நேற்றைய அறிவிப்பின் பிரகாரம் ஆகக்கூடிய சம்பள அதிகரிப்பு 2635 ரூபாவாகவும் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திய சம்பள உயர்ச்சியாகவும் உள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எரிகாயங்களுக்கு இலக்காகி மரணமான பெண்ணின் கணவர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 17

எரிகாயங்களுக்கு இலக்காகி குடும்பப் பெண் மரணமானது தொடர்பாக பொலிஸார் கணவனை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கணவனை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இம்மாதம் ஏழாம் திகதி இரவு குப்பி விளக்கு மேசையிலிருந்து சரிந்து விழுந்ததாகக் கூறி கணவன் மனைவி இருவரும் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் மனைவியான மகான் தவமணி (வயது 44) மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

காயமுற்ற பெண் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பலனளிக்காததால் கடந்த 13ஆம் திகதி இரவு அங்கு மரணமானார்.

இச்சம்பவம் தொடர்பாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் பெண்ணின் கணவரான வேலன் மகான் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். (அ-207)

## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் கிளையின் தலைவரும் சங்கானை கிளை ஸ்ரீ வரதராஜா வெதுப்பக உரிமையாளருமான திரு. ஸ்ரீராம்அவர்களின் அன்புத் தந்தையார் மாரிமுத்து இராசலிங்கம் அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினரும் அங்கத்தவர்களும்,
பணியாளர்களும்.

(சி/554657)
559 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### மகாலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா (ஸ்ரீ)

எமது குடும்பத் தலைவர் மகாலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் 18.08.2008 திங்கட்கிழமை 25/8 காக்கைதீவு மட்டக்குளி, கொழும்பு 15 இல் இறைபதம் அடைந்தார். இறைபதம் எய்திய செய்தி கேட்டு தங்கள் அனுதாபங்களை தெரிவித்தோர்க்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோர்களுக்கும் மேலும் அனைத்து வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (17.09.2008) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
கோகுலம், அல்வாய் வடக்கு, அல்வாய்.

## வாசிப்பு மாதம் பிரகடனம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களில் ஒக்ரோபர் மாதத்தை வாசிப்பு மாதமாகக் கொண்டு செயற்படுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் அறிவுறுத்தியுள்ளார்.

## தவறிவிட்டது

இல.64 யமுனா வீதி, நல்லூர் என்னும் முகவரியுடைய இந்திராவதி நடராஜா என்பவரின் தே.அ.அட்டை (507422195V) 12.09.2008 அன்று முத்திரைச் சந்திக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

## தவறிவிட்டது

கை.இராசரட்ணம் என்பவரது வங்கிப் புத்தகம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிகப்பு நிற கைப்பை 15.09.2008 அன்று கல்வியங்காட்டிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம். வழங்கப்படும்.

C.S.கைலாசபிள்ளை அன்சன்
76, பெரியகடை , யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

தவநாதன் ஹரிஷான்ந் என்பவருடைய தே.அ.அட்டை இல (812652966V) 06.09.2008 அன்று அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர். 863, நாவலர் வீதி, அரியாலை என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து இராசலிங்கம்
### (உரிமையாளர் சிறிராம் அங்காடி, சுழிபுரம்)



தொல்புரம், நெல்லியானைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசலிங்கம் நேற்று (16.09.2008) செவ்வாய்க்கிழமை காலை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, திருஞானசம்பந்தர், இராசலட்சுமி, மகாமணி, காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விஜயபாலன், சரவணமுத்து, ஞான சக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்துமதி (பிரான்ஸ்), இந்துநேசன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சிறிராம் (சிறிவரதராஜா வெதுப்பகம், சுழிபுரம்), காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் தேவராஜா (லண்டன்), அனுதா (HS City Campus) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகாந்தன் (பிரான்ஸ்), சிவப்பிரியா (ஆஸ்திரேலியா), மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், தட்சணா, கீர்த்தனா, ஆதித்தன், மாதுமை, வைகுந்தன், தருண், மகிழினி, லக்ஷாயினி, மோகன்ராம், ஜெயராம், நாராயினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2008) புதன்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவன் கோவில் வடக்கு, ஊமைக்கேணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
'ஜெயராம் இல்லம்',
சுழிபுரம் மத்தி, சுழிபுரம். (78373)
இ.சிறிராம் மகன் (உரிமையாளர், சிறி வரதராஜா வெதுப்பகம், சுழிபுரம்).

## ஒரு புத்தகம் ஒரு சமூகம் நிகழ்வு இன்று கச்சாயில்

யாழ்ப்பாணம், செப்.17

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையால் நடத்தப்படும் 'ஒரு புத்தகம் ஒரு சமூகம்' என்னும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கச்சாய் பொது நூலக மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலக்கிய நிகழ்வினை முதறிஞர் சிற்பி - சிவ.சரவணபவன் நடத்தவுள்ளார். நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசத்துக்கான கீதத்தை ஆக்கி வழங்கிய இசை ஆசிரியர் சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (அ07-231)

## நன்றி நவில்கின்றோம்

இருமனமொத்த திருமணத் தம்பதிகள்

### டினேஸ் - றொனி

ஆகியோரின் திருமணம் கடந்த 15.09.2008 திங்கட்கிழமை யாழ்ப்பாண A.O.G. சபையில் நடைபெற்ற போது வருகைதந்து வாழ்த்து தெரிவித்த மதகுருமார், பெரியோர்கள் எமது இனிய உறவுகள், மானிப்பாய் சர்வதேச பாடசாலை பணியாளர்கள் ஏனைய நிறுவனப் பணியாளர்கள், புனிதயாக்கோபு சபையினர் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல், S.M.S மூலமாக வாழ்த்துத் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்கள் மேலும் திருமண வைபவத்திற்கு தோளோடு தோள் கொடுத்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்தப்பா சின்னம்மா
மார்க்கண்டு யோககுணராஜா

''கொம்பறேசர்வளவு'',
மாசியப்பிட்டி சண்டிலிப்பாய். (78522)

## நன்றி செலுத்தும் வழிபாடு



கர்த்தருக்குள் நித்திரை அடைந்த

### செல்வி கமலாம்பிகை வைத்தியநாதன்

ஓய்வுபெற்ற ஆசிரியர் நெடுந்தீவு மகாவித்தியாலயம்
(சின்னம்மா ரீச்சர்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம். அவரின் நித்திய இளைப்பாறுதலுக்காக நன்றி செலுத்தும் வழிபாடு இன்று (17.09.2008) புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெறும்.

அருட்திரு. ஆர்.யோன் செல்வம், சபைக்குரு
தென்னிந்தியத் திருச்சபை, நெடுந்தீவு.
(78527)

## கண்ணீர் காணிக்கை

எமது பாடசாலையில் சக ஆசிரியையாக கடமையாற்றும் திருமதி அ.மரியறீட்டா அவர்களின் பாசமிகு தாயார் திருமதி எலிசபெத் ஆசீர்வாதம் அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பிராசா பாக்கியம்



சிங்கராயர் வயலைப் பிறப்பிடமாகவும் சின்னக்கோயில் வீதி, கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா பாக்கியம் நேற்று (16.09.2008) செவ்வாயக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மு.தம்பிராசா (முன்னாள் பிஸ்கால் ஊழியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி, அன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், இராசையா ஆகியோரின் சகோதரியும், தபோபாரதி, தயாளகுணவதி, தர்மகுணவதி, சாந்தகுலநாதன், தர்மகுலநாதன், குகதாசன் ஆகியோரின் தாயாரும், கந்தையா, சுந்தரேஸ்வரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஜெகதீஸ்வரி, கமலாதேவி, ரதிதேவி ஆகியோரின் மாமியும், சுதர்சன், சுதர்சினி, சுகுணாளினி, சுபாங்கினி, துஷித்குமார், திவ்யநேசன், பாலரவி, தர்மா, காலஞ்சென்ற மதிசாயினி மற்றும் சிந்துஜா, பபிதா, சகானா, ஹரி, நாகேஸ்வரபாலா, ரவிக்குமார் ஆகியோரின் பேர்த்தியும், மயூரிகா, சங்கீர்த்தனன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.09.2008) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னக்கோயில் வீதி,
கட்டப்பிராய். (78534)
V.சுந்தரேஸ்வரன் (மருமகன்).

### மேசி கமலம் இராஜசேகரம்



சிங்கப்பூரைப்பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மேசி கமலம் இராஜசேகரம் நேற்று முன்தினம் (15.09.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோன் - மேரிசின்னம்மா தம்பதியினரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - வடிவம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோய் இராஜசேகரம் அவர்களின் அன்புமனைவியும் Dr.கமலராஜன், புஸ்பராஜா, காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் நேசராஜா, செல்வராணி (கோப்பாய் மகாவித்தியாலயம்), யோகராஜா, ஆனந்தராஜா, அருட்செல்வி, மேரி நித்தாஞ்சலி A.C (பலாலி ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, திருமகள், முத்துக்குமாரசாமி, யசோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr. பேலோன், ஷீகான், கிரிஷான், அனிற்றா, ஜெனிற்றா, மேரிநிரோஷினி, கேஷினி, புளோரா, ஏஞ்சலா, அஸ்வினி, ஆருணி ஆகியோரின் அன்புப் போத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை (17.09.2008) காலை 9.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் யாழ்ப்பாணம் புனித கொஞ்செஞ்சி மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
திரு.சு. முத்துக்குமாரசாமி
(கிராம அலுவலர் J/259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைப் பிரதேச செயலரின் வீட்டில் கொள்ளையர் அட்டகாசம்

## செயலரின் சாதுரியத்தால் கொள்ளை முயற்சி முறியடிப்பு

கரவெட்டி,செப்.17

பருத்தித்துறை பிரதேசசெயலரின் வீட்டில் முகமூடிக் கொள்ளையர்கள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளனர். செயலரின் மாமனார் தாக்கப்பட்டு காயமடைந்தார்.

செயலரின் சாதுரியமான நடவடிக்கையாலும் அயலவரின் உதவியினாலும் கொள்ளையரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.45 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்றவேளையில் மின்சாரம் தடைப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்பட்டது.

வதிரி, கதிர்காமர் கோவிலடியில் உள்ள பிரதேச செயலரின் வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த முகமூடிக்கொள்ளையர்கள் வீட்டுக்கு வெளியே நின்ற செயலரின் மாமனாரும் புகையிரதத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற அதிகாரியுமான கந்தையா தில்லையம்பலம் என்பவரைத் தாக்கிவிட்டு அவரது கையில் இருந்த தங்க மோதிரத்தையும் அபகரித்துள்ளனர்.

செல்வச்சந்நிதி ஆலயத் தீர்த்தத் திருவிழாவிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியவேளையிலேயே திருடர்கள் உட்புக முனைந்துள்ளனர். பிரதேச செயலர் சாமர்த்தியமாக செயற்பட்டு கதவைச் சாத்தினார். தன் குடும்பத்தினரை ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்துள்ளார்.

இதற்கிடையில் கொள்ளையர்கள் கதவை உடைத்து வீட்டினுள் புகுந்து மின்குமிழ்களை உடைத்து நொறுக்கினர். பின்பு ஒவ்வோர் அறையையும் உடைத்துக் கொண்டிருந்தவேளையில் தொலைபேசித் தொடர்பால் அயலவர் ஒன்று திரண்டு செயலரின் வீட்டைச்சுற்றி சத்தமிட்டவாறு வந்தனர். இதைக்கேட்ட கொள்ளையர்கள் தமது கொள்ளை முயற்சியைக் கைவிட்டு ஓடினர். இதனால் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது. (202-70)




# திணைக்களங்கள், நிறுவனங்களின் ஊழியர்களுக்கு முன்னுரிமையில் விசேட அ.அ. வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பம்

தாவடி,செப்.17

யாழ்.மாவட்டத்தில் திணைக்களங்கள், நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கென நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட ஊழியர்களின் விவரங்களை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் திணைக்கள, நிறுவனத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

கடந்த வருடம் மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-149)

*யாழ்.மாநகர சபைக்குட்பட்ட*

# வர்த்தக நிலையங்கள், உணவகங்களில் பரிசோதனை; காலாவதியான பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி, விற்பனை நிலையங்கள் என்பவற்றில் திடீர் சுகாதாரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்போது காலாவதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட வியாபார நிலைய உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

யாழ்.மாநகர சபையின் பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை இத்திடீர்ப் பரிசோதனையை நடத்தினர்.

அத்துடன் யாழ்.போதனா வைத்திய சாலையின் முன்புறமாக தெருவோரத்தில் நடமாடும் விற்பனையில் ஈடுபட்டிருந்த சிற்றுண்டி விற்பனையாளர்களின் உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டு அவர்களும் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

மற்றும் இச்சிற்றுண்டி வியாபாரிகள் மருத்துவ பரிசோதனை செய்து வைத்திய சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறும், சிற்றுண்டி வகை தயாரிப்பு நிலையம் உள்ளூராட்சி மன்றத்தில் பதிவுசெய்து 2008ஆம் ஆண்டிற்கான உரிமம் பெற்றிருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் உணவு கையாளும் நிலையங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி, விற்பனை நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்ட நிலையங்களிற்கு இவற்றை நிவர்த்தி செய்யும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டு அறிவித்தலும் வழங்கப்பட்டது.

இந்த அறிவுறுத்தல்களை ஏற்றுச் செயற்படாத பட்சத்தில் உற்பத்தி, விற்பனை உரிமையாளர்களுக்கு எதிராகவும், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்க நேரிடும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் தெரிவித்துள்ளார். (202)

# இலங்கை வங்கியின் முகாமைத்துவப் பயிலுநர் ஆள்சேர்ப்புப் பரீட்சைக்கு 177 பேர் தெரிவு

குருநகர்,செப்.17

இலங்கை வங்கியின் முகாமைத்துவ பயிலுநர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்திலிருந்து 177 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பரீட்சை அடுத்த மாதம் முதலாவது வாரத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களின்பெயர்விவரம் இதுவரை கிடைக்கவில்லை என்றும்-

விண்ணப்பித்த சகலரும் பயண அனுமதியைப் பெற்று ஆயத்தமாக இருக்குமாறும் உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம் தெரிவித்தார். (202)



*கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையின் அனுசரணையுடன் ஊற்று நிறுவனம் சுயதொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.*

*வடமராட்சியில் நடத்தப்பட்ட ஒரு வருடப் பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த பயிற்சியாளர்களுக்கு சுயதொழில் கடன் வழங்கல் தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நெல்லை முருகன் மண்டபத்தில் நடைபெற்றது.*

*அனைத்து வங்கி முகாமையாளர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை நிகழ்த்தினர்.*

*ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக்கிளை முகாமையாளர் ப.சங்கர் கருத்துரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட வர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.*

# சாட்டி மாதா திருவிழாவுக்குச் செல்லும் பக்தர்களுக்கு

குருநகர்,செப்.17

சாட்டி சிந்தாத்திரை மாதாவின் வருடாந்த திருவிழாவிற்குச் செல்லும் பக்தர்கள் தாம் பயணம் செய்யும்போது தமது பெயர், அடையாள அட்டை இலக்கம் ஆகியவைகளைக் குறித்து வைத்துக் கொண்டு பயணம் மேற்கொள்ளுமாறு குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் பக்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மானிப்பாய் வைத்தியசாலைக்கு புதிய பொறுப்பதிகாரி

நவாலி,செப்.17

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் திருமதி பத்மராணி ஏகாம்பரமூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கு பணியாற்றிய செல்வி விஜயலட்சுமி சபாரெட்ணம் புத்தூர் அரசினர் வைத்தியசாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (202-100)

# யாழ்.மாவட்டத்தில் 75 வருட காலப்பகுதியில் கலைத் தொண்டாற்றிய கலைஞர்களின் விவரங்கள் ஆவணப்படுத்தப்படவுள்ளன

## யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.மாவட்டத்தில் கடந்த 75 வருடங்களாக கலைத் தொண்டுகளை மேற்கொண்டவர்களின் விவரங்களை ஆவணப்படுத்த மாவட்ட கலாசாரப் பேரவையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஒவ்வொரு பிரதேசத்திலும் கலை தொண்டாற்றியவர்களின் குடும்பத்தினர் தத்தமது பிரதேச செயலக கலாசார பேரவைகளில் விவரங்களை வழங்கிக் கலைஞர்களை கௌரவிக்கும் பணிக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச கலாசார பேரவையினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் பெருவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் காலாகாலமாக இருந்த பல கலைகள் அழிந்து போகும் நிலை காணப்பட்டன. கலைகளும் கலைகளுக்குத் தொண்டு செய்தவர்களும் மக்களால் மறக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்நிலையில் எமது மாவட்டத்தில் கலைகளும் கலைக்குத் தொண்டு செய்தவர்களும் புத்துயிர் பெறவேண்டுமென்பதால் ஒவ்வொரு பிரதேசங்கள் தோறும் பேரவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கலாசாரப் பேரவைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ஒவ்வொரு பிரதேசத்திலும் கலைகள் புத்துயிர் பெற்றதுடன், இலைமறைகாயாகக் காணப்பட்ட பல கலைஞர்கள் வெளி உலகுக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

அழியும் நிலையில் காணப்பட்ட பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம் போன்றவை மீண்டும் புத்துயிர் பெற்று மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வருகின்றன.

இளம் சமுதாயத்தினர் மத்தியில் சிறந்த தலைமைத்துவத்தை உருவாக்கி அவர்களை கலைஞர்களின் சிறந்த வழிநடத்தலின் மூலம் எதிர்காலத்தில் எமது பாரம்பரிய கலைகளை எழுச்சி பெறச் செய்ய முடியும். சமுதாயத்தின் ஒளிவிளக்காக இளம் சந்ததியினரை உருவாக்க ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

### கலை விழுமியங்கள் நிறைந்த பிரதேசம்

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாகவே தென்மராட்சிப் பிரதேசம் சிறப்புமிக்க கலை, கலாசார விழுமியங்களைக் கொண்டதாக வரலாற்று நூல்கள் மூலம் அறியமுடிகிறது. அன்று தொடக்கம் இப்பிரதேசத்தின் கலை விழுமியங்கள் இன்னும் இப்பிரதேச மக்களிடம் [illegible] மேடையேறிய முத்தமிழ் நிகழ்வுகள் மூலம் காணக்கூடியதாக இருந்தன. மேடையேறிய ஒவ்வொரு நிகழ்வுடன் நாங்கள் அனைவரும் ஒன்றிப்போனோம்.

எமது பிரதேச இளஞ்சந்ததியினர் மத்தியில் எமது பாரம்பரிய கலை கலாசாரங்கள் பண்பாடுகளை வளர்ப்பதன் மூலம் எமது மண்ணின் பெருமையை உலகறியச் செய்ய முடியும்.

எமது பிரதேசத்தின் கலைத் தொண்டினைப் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்குப் புகட்டுவதனால் அவர்கள் நிச்சயம் மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டி களில் பங்குபற்றி யாழ்.மண்ணின் பெருமையை எமது கலாசாரத்தை வெளிப்படுத்துவார்கள்.

கலைக்கு, மொழிக்கு கலாசாரத்திற்கு சிறப்புப் பணியாற்றியவர்களின் விவரங்கள் அடங்கிய நூல் மாவட்ட கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படவுள்ளது - என்றார். (202-207)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாக்குநர் ஆணையகத்தின் மத்திய நிலையம் விரைவில் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆரம்பம்

நல்லூர்,செப்.17

இலங்கை தேசிய புத்தாக்குநர் ஆணையகத்தின் மின்தள இணைய மத்திய நிலையம் யாழ்.செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் இந்த நிலையத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புலமைச் சொத்து பொதுமுகாமையாளர் கலாநிதி கருணாரத்தின தெரிவித்துள் ளார்.

யாழ்ப்பாணம் உட்பட கண்டி, காலி நகரங்களிலும் இந்த மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-111)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

## POST OF REGISTRAR

Applications will be received by me up to 31st October, 2008 for the post of Registrar from suitably qualified candidates. Applications should be made in the prescribed application form and sent under registered cover to the Vice-Chancellor, University of Jaffna, Srilanka, Thirunelvely, Jaffna.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m, in size.

The envelope containing duly filled application form must bear "Post of Registrar" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Vice-Chancellor on or before 31st October, 2008.

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date will be rejected without intimation.

**Salary Scale**

(U-EX 3(I) ):Rs.49,205-2 x 800 : 12 x 850 :4 x 900 - 61,305/=p.m

**Qualifications :**

(a) A graduate who possesses a Ph.D or a Master's Degree with research in Administration or Management or other relevent fields with not less than twelve (12) years administrative experience.

OR

(b) A graduate with a Masters degree by examination or a Diploma in Administration or Management with not less than fourteen (14) years of administrative experience.

OR

(c) Internal applicants who are eligible in terms of the UGC circular No.657 & 701.

Detailed statement of service record during the past 14 years giving the following particulars should be annexed to the application.

(i) Description of the posts with Grades
(ii) Name(s) of the Institution (s)
(iii) Salary scales attached to the posts
(iv) Date of appointment and date of leaving
(v) Reasons for leaving

**Note:** "Administrative Experience" means experience gained in a post in the SriLanka Administrative Service or in a comparable or a higher post after obtaining a degree from a recognized University. The term "Administrative Experience" also means that the experince gained in general administration or in overall management of an organization. The Experince gained in a specialized field such as Finance, Engineering or other Technical field by itself is inadequate for this purpose.

**Sabbatical leave entitlement:**

The holder of the post of Registrar will become eligible for one year paid sabbatical leave or two years no pay sabbatical leave on completion of 07 years of service. The Registrar proceeding abroad on sabbatical leave to enrich his administrative capacity will be eligible to receive passage for himself/ herself and his/her spouse.

**Transport:**

Official transport will be provided in accordance with Government regulations.

**STATUTORY BENIFITS:**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment Trust Fund benefits.
5. Free medical care.

Those who are in Public Service/ Corporations/ Statutory Bodies should forward their applications through their respective heads of Departments/ Corporations/ Boards. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

SENIOR UNIVERSITY STAFF WITH APPROPRIATE QUALIFICATIONS AND EXPERINCE WHO ARE PREPARED TO COME ON SABBATICAL LEAVE WILL ALSO BE CONSIDERED FOR APPOINTMENT ON CONTRACT BASIS.

**Vice - Chancellor**
**University of Jaffna.**
**15.09.2008.**


# வாடிக்கையாளர் எடுக்காத அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படுவது குறித்து முறைப்பாடு

## 18 மாதங்களாகியும் தீர்வு இன்றித் தொடர்கிறது

சிறிலங்கா ரெலிகொம் நிறுவனம் தாம் எடுக்காத தொலைபேசி அழைப்புகளுக்கும் கட்டணம் அறவிட்டுள்ளது என்றும் இது தமக்குமட்டுமல்ல வாடிக்கையாளர்கள் பலருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினையென்றும் தெரிவித்து முன்னாள் மாநகர ஆணையாளரும் யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவருமான சீ.வீ.கந்தையா சிவ ஞானம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முறைப்பாடு செய்துள்ளார். இந்த விவகாரத் தில் தலையிட்டு நிவர்த்திசெய்யும் படியும் அவர் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள முறைப்பாட்டின் விவரம் மக்களுக்கு பெரும் விவகாரமாக மாறியிருப்பதால் உதயன் மக்கள் மன்றத்தில் பிரசுரமாகின்றது.

**மக்கள் மன்றம்**

நாம் சட்டபூர்வமாகச் சிட்டைகள் யாவற்றையும் செலுத்தியுள்ளபோதிலும் நிலுவை செலுத்தவேண்டும் என்று கூறி எமது பக்கத்தில் எவ்வித தவறும் இல்லாத நிலையில் எமது தனிப்பட்ட தொலைபேசி கடந்த 03.09.2008ஆம் திகதி முதல் துண்டிக்கப்பட்டுள்ளதை தங்களின் கவனத்திற்குக் கவலையுடன் கொண்டு வர விரும்புகின்றேன்.

இந்தப் பிரச்சினையானது ஒக்டோபர் 2006, நவம்பர் 2006 ஆகிய மாதங்களில் தவறானதும், மேலதிகமான சிட்டைகள் சம்பந்தமானதும் மற்றும் ஜனவரி 2007, ஏப்ரல் 2007 ஆகிய மாதங்களில் நாம் ஒருபோதும் எடுத்தி ராத லெபனான், குவைத் ஆகிய நாடுகளுக்கு எடுக்கப்பட்ட அழைப்புக் கட்டணங்கள் சம்பந்த மானது மாகும். இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா ரெலி கொம் நிறுவனத்தின் சிட்டையிடும் மையத் தின் கணக்காளருக்கு பலமுறை முறையிட்ட போதும் அவர் தமது ஒரே இருப்பு பதிலாக சிட்டைகள் முறைப்படியானதெனத் தெரிவித்தார்.

சர்வதேச அழைப்புகள் பிணக்கு சம்பந்தமாக எமக்கு பூட்டுதல் வசதிகள் வழங்கப்பட்டதாகவும் அதனால் கட்டணங்கள் செலுத்தவேண்டும் எனவும் தெரிவித்தார். எனினும் இந்த வசதி எமக்கு 19.05.2007இல் வழங்கப்பட்டது. ஆனால் இந்தப் பிணக்கு இதற்கு முன்னைய மாதங்களுடன் தொடர்புடையது. இந்த சூழ்நிலையில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு 31.10.2007இல் புகார் செய்யப்பட்டது. அவர்கள் இவ்விடயத்தைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தனர். தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில் ஒரு முழுமையான விவரம் கொண்ட கடிதம் 22.11.2007ஆம் திகதி தொலைநகல் மூலமும், பதிவுத் தபால்மூலமும் அனுப்பிவைக்கப்பட்டது.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அதன் 19.12.2007ஆம் திகதிய கடிதமூலம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடமிருந்து அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தது. எனினும் இந்தப் பிரச்சினை கடந்த 18 மாதங்களாக இந்த அதிகாரிகளினால் தீர்த்துவைக்கப்படாமலே உள்ளது.

### தனிப்பட்ட விடயமல்ல

யாழ்ப்பாணத்தில் இந்த விடயம் என்னுடன் மட்டும் சம்பந்தப்பட்ட ஒன்று அல்ல என்ற காரணத்தினால் இந்தக் கடிதத்தை தங்களது தனிப்பட்ட கவனத்திற்காக சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. லெபனான், குவைத் நாடுகளுக்கு மட்டுமன்றி வேறு பல நாடுகளுக்கும் அழைப்புகள் எடுக்கப்பட்டு இவ்வாறான முறைகேடான கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு பல தொலைபேசிப் பாவனையாளர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தமது ஏகபோக நிலையை பிரயோகித்துப் பாவனையாளர்களை அச்சுறுத்தி இவ்வாறான கட்டணங்களை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் அறவிட்டுள்ளது. மேலும் பலரின் பிணக்குகள் தீர்க்கப்படாமலே உள்ளன.

எனவே யாழ்ப்பாண பொதுமக்களை ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் இவ்வாறு சுரண்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு தாங்கள் தலையிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன்,எமது தொலைபேசிதொடர்புதுண்டிக்கப்பட்டதினால்எமக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள், இடையூறுகள் பற்றித் தாங்கள் உணர்ந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

# வாசகர் திருமுகம்

## பாவமென்ன செய்தனரோ இந்தப் பட்டதாரிகள்?

வேலையற்ற பட்டதாரிகளான எம்மில் பலர் 2004ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே வேலையற்று இருக்கின்றோம். பலர் 30 வயதினைக் கடந்தபோதும் வேலையின்மையால் வாழ்க்கையின் அடுத்த படிகளிற்கு நகரமுடியாமல் இருக்கின்றார்கள். வடமாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2007இல் விண்ணப்பம் கேரப்பட்டு ஒருவருடம் கடந்த பின் நேர்முகத்தேர்வு கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது. ஆனால் நியமனம் இதோ இதோவென இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. நியமனம், என்ன அடுத்த ஆண்டிலா? அற்புதமான நிர்வாக செயற்பாடு இப்படியே காலம் கடந்தால் பட்டதாரிகள் பட்ட(பட்டுப்போன)தாரிகளாகவே போவதா? கல்வியியல் கல் லூரிகளில் இருந்து வெளியேறுபவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கப்படு கிறது. இம்முறை கூட எமக்கு பின் நேர்முகத்தேர்வு அவர்களுக்கு நடத்தப்பட்டு அடுத்தமாதமே நியமனம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு போட்டிப் பரீட்சையும் இல்லை. வெட்டுப்புள்ளியும் இல்லை. ஆனால் பட்டதாரிகள் என்ன அறிவு (பட்ட)தாரிகளா? அவர்களுக்கு மட்டும் ஏன் இந்த அவலநிலை? 1500 பேருக்கு வெற்றிடம் உள்ளதாக விண்ணப்பம் கோரப்பட்டபோதும் 600 பேருக்கே நியமனம் என அறிவிக்கப்பட்டது. மிகுதி வெற்றிடத்திற்கு நிரப்பப்படவுள்ளவர்கள் யார்? வேலையில் உள்ள அதிகாரிகளே வேலையற்றவர்களின் வேதனை புரிகிறதா வேலையை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாற்றமடைந்து பட்டமரங்களாய் பட்டதாரிகள் உள்ளனர். நியமனம் கிடைக்குமா? இல்லை நியாயம் தான் கூறப்படுமா?

- வேலையற்ற பட்டதாரி.

## கடவுச்சீட்டை இங்கேயே பெற்றுக்கொள்ள வசதி செய்க

இங்கு தற்போது பல்கலை. அனுமதி பெற்றோர் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டு பதிவுகள் நடைபெறுகின்றன. இந்த அனுமதிக்காகக் காத்திருந்து அனுமதி கிடைக்காத மாணவர்கள் பலர் உள்ளனர். அவ்வாறான மாணவர்கள் தமது உயர்கல்வியை வெளிநாடுகளில் தொடர்வதற்கு (இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளில்) பல்கலைக்கழகங்களில் அனுமதிக்காக விண்ணப்பிக்கமுடியும். அவ்வாறான வாய்ப்புகள் உள்ளவர்களிற்கு தற்போது மிகவும் இன்றியமையாத ஆவணமாக கடவுச்சீட்டு உள்ளது. இவ்வாறான நிலையில் மாணவர்களாகிய நாங்கள் கொழும்பு சென்று புதிய கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வது என்பது இயலாத விடயம். தற்போது கொழும்பு செல்வதாயின் பாதுகாப்புத் தரப்பின் அனுமதி பெறப்படல்வேண்டும். அதுமட்டுமல்லாது போக்குவரத்துக்கான அதிக செலவு மற்றும் அங்கு தங்குவதில் உள்ள நெருக்கடிகள் என்பன முக்கியமாக கவனிக்கத்தக்கன.

இந்நிலையில் புதிய கடவுச்சீட்டினை இங்கேயே பெற்றுக்கொள்வதற்கு வசதியாக நடமாடும் சேவை ஒன்றினை ஏற்பாடு செய்வதே சிறந்த ஒன்றாகக் கருதமுடியும். அல்லது சமூகசேவைகள் அமைச்சு/வடக்கின் இடைக்கால நிர்வாக சபையின் ஊடாக பெற்றுக் கொடுத்தல் என்பதனையும் பிரேரிக்கமுடியும்.

இதுதொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரிய நடவடிக்கை எடுப்பார் என நம்புகின்றோம்.

உரிய ஏற்பாடுகளை விரைவாக மேற்கொண்டு முன் அறிவித்தலோடு நடவடிக்கை எடுப்பார்கள் ஆயின் மாணவர்கள், பழையனவற்றைப் புதிப்பிப்போர், வெளிநாட்டுத் தொழிலை மேற்கொள்ள உள்ளோர் மற்றும் கடவுச்சீட்டினைத் தொலைத்தோர் இதன் மூலம் பலர் நன்மையடைவார்கள் என நம்புகின்றோம்.

வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய ம்க்களின் நன்மை கருதி குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் கிளைகள் ஏனைய பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ளமையையும் நினைவுபடுத்துகின்றேன்.

தி.சசிகரன்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட்

# சென். பற்றிக்ஸ் - யூனியன் கல்லூரி அணிகள் இன்று இறுதி ஆட்டத்தில் கடும் பலப்பரீட்சை

வலி.வடக்கு, செப். 17

யாழ்.மாவட்டத்தில்முதல்தடவையாக 15 வயதுப்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான50ஓவர்கள்கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று புதன்கிழமை காலை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில்ஆரம்பமாகவுள்ளது

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் தெல்லிப் பழை யூனியன் கல்லூரியும்மோதிக் கொள்ளவுள்ளன. இரு அணிகளும் ஓர் அணிக்கு மற்ற அணி சளைத்தவர்கள் அல்ல என்ற நிலையில் மோதிக் கொள்ள வுள்ளன. இரு அணிகளும் 'சுப்பர்சிக்ஸ்' போட்டியில் விளையாட முன்னர் குழு போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று 'சுப்பர்சிக்ஸ்' போட்டிக்குள்நுழைந்தன.

'சுப்பர்சிக்ஸ்' போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரியிடம் தோல்வி அடைந்த அதே வேளை யூனியன் கல்லூரி சென்.பற்றிக்ஸ் கல்லூரியிடமும் யாழ்ப்பாணக் கல்லூரியிடமும் தோல்வி அடைந்திருந்தது.

இரு அணிகளிலும் பொறுமையாக நின்று துடுபெடுத்தாடும் வீரர்களும் வேகப் பந்து வீச்சாளர்களும் சுழல் பந்து வீச்சாளர்களும் உள்ளனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களைப் பொறுத்தவரையில் பலர் பந்து வீச்சாளர்களாகவும் துடுப்பாட்ட வீரர்களாகவும் காணப்படுகின்றனர்.

யூனியன்கல்லூரியிலும்இந்நிலைமை காணப்பட்டாலும் துடுப்பாட்டத்தில் மட்டுப்படுத்திய வீரர்களே காணப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தின்ஏற்பாட்டில்யாழ்ப்பாணப்பாடசாலைகள் கிரிக்கட் சங்கத்தினால் யாழ்ப்பாணம்ஹற்றன்நஷனல்வங்கியின்அனுசரணையுடன் இப் போட்டி இடம்பெறுகின்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி இதுவரை 09 போட்டிகளில் விளையாடி மொத்தமாக ஆயிரத்து 269 ஓட்டங்களை59விக்கட்டுகளைஇழந்து பெற்றுள்ளது எதிராக விளையாடிய பாடசாலைகளுக்கு1110ஓட்டங்களைக்கொடுத்து82 விக்கட்டுகளையும்கைப்பற்றியுள்ளது.

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை, வட மாகாணத்தில் தனது 10 ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு யாழ்.கல்வி வலயத்துடன் இணைந்து மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்துகின்றது.

யாழ்.கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையே இந்தக் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* நாவாந்துறை றோ.க.எதிர் அத்தியார் இந்து
* உரும்பிராய் இந்து எதிர் சென்.சாள்ஸ்
* முத்துத்தம்பி ம.வி எதிர்கோண்டாவில் இந்து ம.வி.
* விக்னேஸ்வரா வித்தி. எதிர் இடைக்காடு ம.வி.

(50-86)

## சிதம்பரக் கல்லூரி வீரன் வசிகரனுக்கு ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம்

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் வல்வை சிதம்பரக் கல்லூரி மாணவன் ச.வசிகரன் தங்கம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்தவாரம்வவுனியாவில்நடைபெற்ற மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மாணவன் சண்முகநாதன் வசிகரன் 19வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இவர் வல்வை சிதம்பரக் கல்லூரி அதிபர் சி.மகேந்திரன் வழிகாட்டலிலும் மாணவனின் விளையாட்டுக் கழகமான வல்வெட்டித்துறைநெடியகாட்டு விளையாட்டுக் கழகத்தினரின் நெறிப்படுத்தலிலும் சிறப்பான பயிற்சியைப் பெற்றவர்.



இவர் பாடசாலைப் போட்டிகளிலும் உள்ளூர் விளையாட்டுக்கழக விளையாட்டுகளிலும் பங்குபற்றிப் பல சாதனை பலபடைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (50-70)



உடுப்பிட்டி II கொத்தணி மட்ட விளையாட்டுப் போட்டி கம்பர்மலை யங்கமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. சிறுவர்கள் முத்துமாலை கோர்த்தல், பொருள் பொருத்துதல் போட்டிகளின் பங்குபற்றுவதை முதலிரு படங்களிலும் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.சுப்பிரமணியம் சான்றிதழ் வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,செப்.17

உடுவில்கல்விக்கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்ட லீக் முறையிலான சுற்றுப்போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

13 வயதுப் பிரிவு

* உடுவில் முருகமூர்த்தி வித்தி.எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.
* ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி. எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தி.

16 வயதுப் பிரிவு

* உடுவில் முருகமூர்த்தி வித்தி. எதிர் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

18 வயதுப் பிரிவு

* குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தி. எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

(50-86)

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான கிரிக்கெட் தெல்லிப்பழை அணி மாவட்டச் சம்பியனானது

வலி.வடக்கு,செப்.17

யாழ்.மாவட்டப்பிரதேசசெயலகங்கள், உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளின்கிரிக்கெட் அணிகளுக்குஇடையேஇடம்பெற்ற 15 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென் பந்துக் கிரிக்கெட் போட்டியில் தெல்லிப் பழைப் பிரதேச செயலகக் கிரிக்கெட் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில்இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியும், தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில்துடுப்பெடுத்தாடிய தெல்லிப் பழைப் பிரதேச செயலக அணி 15 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சுரேஷ் இரண்டு ஆறுகள் இரண்டு நான்குகளுடன் 20 ஓட்டங்களையும் பிரசன்னா10ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டார்கள்.

கரவெட்டிப் பிரதேச செயலக அணியின் சார்பில் பந்து வீசிய விமல், முரளி தலா மூன்று ஓவர்கள் பந்துவீசி 02 விக்கெட்டுக்களையும், எல்.அகீலன், யூ.சுஜீவன், சிவா ஆகியோர் தலா மூன்று ஓவர்கள் பந்துவீசி ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள்.

72 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கரவெட்டிச் செயலக அணி 14:1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ராஜன் 16 ஓட்டங் களையும் ஜீவா 12 ஓட்டங்களையும் சுஜீவன் 10 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டார்கள்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி சார்பில் பந்து வீசிய அமல் 03 ஓவர்கள் பந்துவீசி 03 விக்கெட்டையும் சதீசன் 03ஓவர்கள்பந்து வீசி02விக்கெட்டையும் சுகி 02 ஓவர்கள் பந்து வீசி 02 விக்கெட்டையும்,புனிதன், நதீஷ்தலாஇரண்டு ஓவர்கள் பந்துவீசி ஒவ்வொரு விக்கெட்டைக்கைப்பற்றினார்கள்.

ஆட்ட முடிவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 10 ஓட்டங்களினால் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (50-86)

## மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியது அளவெட்டி அருணோதயா அணி

வலி.வடக்கு,செப்.17

வட மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் வெற்றியீட்டிய அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவுக்கான வீராங்கனைகள் பதக்கங்களைப் பெற்ற வெற்றிக்களிப்பில் ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்களுடன் காணப்படுகின்றார்கள்.



17 வயதுப் பிரிவுற்கான 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தையும் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்ற ஆர்.காவேரி, 200மீற்றர் ஓட்டப்போட்டியில் 2 ஆம் இடத்தைப்பெற்ற ஆர்.அக்சனா, கோலூன்றிப் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற எஸ்.தனுஜா ஆகியோர் பொறுப்பாசிரியர்களும் காணப்படுகின்றனர். 4×100 மீற்றர், 4×400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளிலும் இவர்கள் வெற்றி பெற்றனர். (50-86)



வடமராட்சி மாலுசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவிலே பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம், மைக்கேல் விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் ஆகியோர் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்.....



நவாலி முருகானந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் இடம்பெற்ற மாணவர்களின் விநோத உடைப் போட்டியைப் படத்தில் காணலாம். *(படம்:நவாலி செய்தியாளர்)*



இலங்கை வங்கியின் 69 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் அச்சுவேலி இலங்கை வங்கி கிளையிலும் விமரிசையாக நடைபெற்றன. விழாவில் ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர் சி.சந்திரலிங்கம், கலாவிநோதன் என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி) ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் ரி.புவனேந்திரன், அச்சுவேலி பங்குத்தந்தை வணபிதா துரைரத்தினம் மற்றும் வங்கி உத்தியோகத்தர் செல்வி சுந்தரலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிர மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வாராந்த நிகழ்வில் இசைமணி எஸ்.செல்லத்துரை பக்கவாத்தியங்கள் சகிதம் இசைக்கச்சேரி செய்வதைப் படத்தில் காணலாம். *(படம்:கர்ணன்)*



மானிப்பாய்ப் பிரதேச அரசினர் வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் கூழாவடி ஆனைக்கோட்டை பூந்தளிர் சிறுவர் கழக மாணவிகள் வரவேற்பு நடனம் ஆடுவதையும் மேடையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.குமாரவேற்பிள்ளை, மலேரியாத் தடுப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி க.த.சிவபாதம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆபிள்ரி பெதலிங்கம் மற்றும் உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். *(படம்: நவாலி செய்தியாளர்)*



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையிலான வலய மட்டக் கரப்பந்தாட்டப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவான கைதடி- நாவற்குழி அ.த.க.பாடசாலையின் 15 வயதுப் பிரிவு அணிகள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி நிகழ்வில் பயிற்சி பெற்ற ஒருவருக்கு வேலணைப் பிரதேச செயலர் ம.நந்தகோபாலன் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.செல்வச்சந்திரன், [illegible] உதவியாளர் எஸ்.லோகேஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படம்: லக்ஸ்மன்)*



உரும்பிராய் கிழக்கு சென்.மைக்கேல் சனசமூக நிலையத்தின் வருடாந்த விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உரும்பிராய் மக்கள் வங்கி முகாமையாளர் பி.கார்த்திகேசு மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சனசமூக நிலையத்தின் தலைவர் என்.இராசநாயகம் மற்றும் நிலைய உறுப்பினர்கள் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.




இலவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய விளையாட்டு அபிவிருத்திக் [illegible] எல்லை கடந்த நட்சத்திரங்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று [illegible] ஆண்களுக்கான சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற சண்டிலிப்பாய் இ[illegible] அணியின் சிறந்த விளையாட்டு வீரருக்கு யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட [illegible] [illegible]கரன் பரிசில் வழங்குவதையும் பெண்களுக்கான போட்டியில் வெற்றிபெற்ற சங்கானை சிவப்பிரகாச ம.வி. அணியினருக்கு [illegible] [illegible] பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் உணர்வுக்கு உயிரூட்டும் சின்னம்

வட இந்தியாவில் யமுனை நதிக்கரையிலுள்ள ஆக்ரா வில் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் இருக்கின்றது.

ஆக்ரா நகரம் மகாபாரத நாள்களிலேயே ''அக்ரபனா'' என்கிற பெயரில் அறியப்பட்டதாம். அக்ரபனா என்பதற்கு ''சொர்க்கம்'' என்று பொருள். ஆக்ரா ''தாஜ்மகால்'' இருப்பதால் சுற்றுலா வரை படத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது. முகலாய அரசர் ஷாஜஹானால் மனைவி மும்தாஜின் நினைவாக எழுப்பப்பட்ட இந்தக் காதல் சின்னத்தை ''பளிங்கில் ஒரு கனவு'' என்றும் குறிப்பிடுகிறார்கள்.

மும்தாஜின் இயற்பெயர் அர்ஜுமந்த் பானு பேகம். மன்னர் ஜஹாங்கீரின் ஆட்சியில் பிரதான மந்திரியாக இருந்த ஆப்கானின் மகள். மீனா பஜார் சந்தையில் இளவரசர் குர்ரம் (ஷாஜஹான்) பேரழகியான மும்தாஜைக் கண்டு மோகித்து, சில ஆண்டுகளுக்குப்பிறகு மணம்புரிந்தார். அதன் பிறகு பதினேழு ஆண்டுகள் உயிருடன் இருந்த மும்தாஜ் பதினான்கு குழந்தைகளுக்குத்தாயானாள். அவர்களில் ஏழுபேர்தான் உயிருடன் இருந்தார்கள். பெண் குழந்தைகளில் சரித்திரம் நினைத்துக் கொள்ளும் பெயர் ஜஹானாரா. ஷாஜஹான் தன் மகன் ஔரங்கசிப்பால் ஆக்ரா கோட்டையில்சிறைவைக்கப்பட்டபோதுகடைசி நாள்கள்வரைதுணைநின்றவள்இவள். மும்தாஜின்மீதுதீராதபிரேமைகொண்ட ஷாஜஹான் அவளை அதிகம் விட்டுப் பிரிந்திருந்ததே இல்லையாம்.

1631 இல் தாஜ்மஹால் கட்டுவதற்காகஅஸ்திவாரமிடப்பட்டபோது புர்ஹாம்பூரில் புதைக்கப்பட்ட மும்தாஜின் உடலைக் கொண்டுவந்து தாஜ்மஹால்கட்டப்பட்டிருந்ததோட்டத்தின் ஒரு பக்கத்தில் புதைத்து வைத்தார்களாம். தனக்காக, அன்பின் சின்னமான நினைவுச் சின்னம் ஒன்றைத் தன் கணவர் எழுப்ப வேண்டும் என்பது மும்தாஜின் கடைசி ஆசை. அதை நிறைவேற்றத்தான் தாஜ்மஹால் கட்டப்பட்டது.

தாஜ் மஹாலை உருவாக்க 22 ஆண்டுகள் ஆயிற்றாம். 43 வகை உயர் ரக கற்கள் பயன்படுத்தப்பட்டன. மக்ரானாவிலிருந்து பளிங்குக் கற்களும், ஜெய்சல்மீரிலிருந்து பொன்நிற கற்களும், சீனாவிலிருந்து பச்சைக்கல்லும், திபெத்திலிருந்து சாம்பல் நிறக்கல்லும், ஆப்கானிஸ்தான், எகிப்து போன்ற இடங்களிலிருந்து நீலக்கல்லும், கோல்கொண்டாவிலிருந்து வைரமும்எடுத்துவரப்பட்டன.

யமுனையின் நீர் தாஜின் அஸ்திவாரத்தைப் பாதிக்காத வண்ணம் திட்டமிட்டுக் கட்டப்பட்டிருப்பதால் இத்தனை ஆண்டுகள் ஆகியும் இது சேதப்படாமல் இருக்கிறது.

மும்தாஜ், ஷாஜஹான் இருவருடைய சமாதிகளும் தாஜ்மகாலின் கீழ்த் தளத்தில் உள்ளன. அமைதியில் உறங்கும் சமாதிகளின் மீது தங்கக் கம்பிகளாலும், நவரத்தினக் கற்களாலும் அலங்காரம் செய்திருந்தார்களாம். தொங்கு விளக்குகளில் செருகப்பட்ட வெள்ளி மெழுகுவர்த்தி ஏந்திகளும், பாதங்களை வருடும் பாரசிகக் கம்பளங்களும், முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு நடந்த கலகங்களிலும், போர்களிலும் கொள்ளை போய்விட்டன.

கீழ்த் தளத்தில் ஏற்படும் சிறிய சப்தம் கூட எதிரொலியாக வளைந்து திரும்பி வருகிறது. தாஜ்மகாலை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அதன் அழகும், எளிமையும் சற்றும் குறைவதில்லை. நுழைவாயிலில்குரானிலிருந்து எடுக்கப்பட்ட வரிகள் அராபியில் பதிக்கப்பட்டு அழகிய டிசைனைப் போல் தெரிகிறது.. மத்தியில் நின்று பார்த்தால் நேர் வகிடு கிழித்தாற்போல் நீரூற்றுக் குளங்களும், இருபுறங்களிலும்பாதைகளும் பச்சைப்பசேலென்று நடுவில் எட்டிப்பார்க்கும் புல்தரையும் தெரிகிறது. இரண்டு பக்கங்களிலும் இது போலவே கொஞ்சம் கூட மாறுபடாத நீரூற்று அமைப்புகள். தாஜ்மஹாலின் உயரம் சுமார் 220 அடி என்கிறார்கள்.

அழகிய மகாராணி ஒருத்தியைச் சூழ்ந்து நிற்கும் நான்கு சோடிப் பெண்களைப் போல் இவை காட்சி தருகின்றன. இவற்றுக்குள் ஜன்னல்களும் மேல் வரை போக வழி யும் இருக்கிறதாம். பின் புறத்தில் சலசலக்கும் யமுனை நதி.

பௌர்ணமி இரவில் தாஜ்மஹாலின் பிம்பம் யமுனை நீரில் விழுவதைப் பார்க்க வெகு அழகாக இருக்கும். இஸ்லாமியர்களுக்கு 4 என்பது சிறப்பான எண் என்பதால் இங்குள்ளவைகள் (வாயில்கள் உட்பட) அனைத்தும் நான்காகவோ, இல்லை நான்கு மடங்கு எண்ணிக்கை கொண்டதாகவோ உள்ளன.

தொகுப்பு: தீபிகா



# புதன் பொய்கை

## விஞ்ஞானத்தில் விடுகதைகள்

1. ''பொப்'' என்று எரிந்து அணைந்திடுவான். றொக்கற்றின் எரிபொருளாய் ஆகிடுவான்; மாஜரின் ஆக்கிட உதவிடுவான்; இலேசானவன் (வாயுக்களில் அடர்த்தி குறைந்தவன்) இவன் யார்?

2. ஒளித் தொகுப்பில் கலந்திடுவான். சுவாசத்தில் வெளிவருவான். வளியில் பாரம் (அடர்த்தி) கூடியவன். தகனத்துணையிலி ஆனவன். தெளிந்த சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக்கிடுவான். இவன் யார்?

3. ஒளித் தொகுப்பில் வெளிவருவான். சுவாசமதில் உட்புகுவான். தகனத்துணையி ஆன இவன் மலையேறி, சுழியோடி, நோயாளி, விண்வெளியில் வீரரென இரும்புக் கூண்டிலிருந்து உதவிடுவான். யாரிவனோ?

4. தாக்குதலைத் தவிர்ப்பர். சாத்வீகத்தைக் கடைப்பிடிப்பர். கண்ணாடி சிறையில் (மின்குமிழ்) அடைபடுவர். யாரிவர்கள்?

5. உயிர் மூச்சில் பிறந்தவன். புகுந்ததும் தெட்டத் தெளிந்தவன். பட்டென்று (பால்நிறம்) கலங்கிடுவான். அ புகுந்தவன் யார்? ஆ. கலங்கியவன் யார்?

சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள்
(விஞ்ஞான ஆசிரியர்),
விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

### விடைகள் மாறியுள்ளன

1. காபனீரொட்சைட்டு, சுண்ணாம்பு நீர்
2. ஒட்சிசன் 3. ஐதரசன்
4. சடத்துவ வாயுக்கள்/ அருவ வாயுக்கள்
5. காபனீரொட்சைட்டு,



# மிருகங்களுக்கு விவேகமுண்டா?

எல்லா விலங்குகளுமே எதையாவது செய்வதானால் அதனைப் பழகியாகவேண்டும். முற்றிலும் உள் உணர்வின் மூலம் (அறிவால்) செயல்படும் மிருகங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் பழகும் நடைமுறையானது ஒரு போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

பல சந்தர்ப்பங்களில், ஒரு மிருகம் எதனையும் செய்வதற்கு பழகுகிறது என்று நாம் நினைக்கும் போது என்ன நடக்கிறது என்றால் பிறக்கும் போதே அதற்கு இருந்துள்ள உள்ளுணர்வானது வளர்ச்சியுறுகின்றது அல்லது முதிர்ச்சி படைகிறது என்பதாகும். உதாரணம்:

பறவைகள் கூட்டைவிட்டு வெளியேறி பறக்க முயற்சிப்பதாகும். இது அதன் பறக்கும் ஆற்றல் வளர்ச்சியுறுவதையே காட்டும்.

உண்மையில் பழகுவதென்பது தவறுகள் விடுவதும், அதனைத் திருத்திக்கொண்டு மீண்டும் சரியாக முயற்சிப்பதையுமே குறிக்கும்.

நாய்கள் இவ்வாறுதான் பழகுகின்றன. ஒரு நாய் செய்வதை இன்னொரு நாய் பார்த்து பழகுவதென்பது இல்லை.

புத்தியை அல்லது விவேகத்தைப் பயன்படுத்துவது என்பது ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைக் குறிக்கும். முன்பு ஒரு போதும் எதிர்கொள்ளாத ஒரு கடினமான விடயத்தை தீர்த்துக் கொள்வது அல்லது உள்ளுணர்வின் மூலம் எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்று தெரியாத நிலையில் பிரச்சினையை எதிர்கொண்டு தீர்ப்பதாகும்.

பரிசோதனைகளின் வாயிலாக விவேகத்தைப் பயன்படுத்துவதில் குரங்குகளும் சிம்பன்சிகளும் ஓரளவு திறமையைப் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு பரிசோதனையின் போது, ஓர் அறையில் வாழைப்பழத்தை எட்டமுடியாத உயரத்தில் தொங்கவிட்டு குரங்கொன்றை அந்த அறையில் விட்டார்கள். அது சிறிது நேரம் வாழைப்பழத்தைக் கவனித்தது. அறையில் இரண்டு சிறு பெட்டிகள் இருந்தன. குரங்கு பெட்டிகளையும் கவனித்தது. பின்னர் சட்டென செயற்பட்டு பழத்துக்கு நேரே கீழே ஒரு பெட்டியை வைத்து அதன் மீது மற்ற பெட்டிகளையும் வைத்து அதன் மீது ஏறி பழத்தை எடுத்துக் கொண்டு இறங்கியது. பழத்தை எவ்வாறு பெறலாம் என்பதைப்பற்றி குரங்கு யோசித்து முடிவெடுத்திருக்கிறது. அதாவது குரங்கு தனது விவேகத்தைப் பயன்படுத்தியுள்ளமை இச்சம்பவத்தில் வெளியானது.


நாய்கள், பூனைகள் இன்னும் சில காட்டுமிருகங்களாலும் விவேகத்தைப் பயன்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். ஆனால் இது நிரூபிக்கப்படுவது கடினமாகும்.

தாரணி, கொக்குவில்.

சிரிக்கும் முன்
சிந்தித்தவன் - வாழ்கிறான்
சிரித்த பின்
சிந்தித்தவன் - தாழ்கிறான்

என் வாழ்வுக்கு வழி
கூறிய இவள் தன் வாழ்வுக்கு வழி
தேடுகிறாள்.

மகேந்திரன் - மேனன்,
கொற்றாவத்தை.



# சிம்பன்சி குரங்கிற்கு 13 சோடி விலா எலும்பு

வாலில்லாத சிம்பன்சி குரங்கின் உடல் அமைப்பு மனிதனுடையது போலவே உள்ளது. ஆனால் அதற்கு 13 சோடி விலா எலும்புகளுண்டு. மனிதனுக்கு வழமையாக 12 சோடி விலா எலும்புகள் மட்டுமே இருக்கும்.

சிம்பன்சியின் தசைப்பகுதிகளும் தோலும் கருமை நிற முரட்டு மயிர்களால் மூடியிருக்கும், முகத்தையும் கைகளையும் தவிர வளர்ந்து வயதாகும்போது வாயைச் சுற்றிலும் நரைமயிர் தோன்றும். தோல் சாம்பல் அல்லது கருமை நிறத்தை அடையும்.

மத்திய ஆபிரிக்கக் காட்டில் சிறு குழுக்களாக சிம்பன்சி காணப்படுகின்றது. சியாரிலோனாவிலிருந்து கிழக்காக விக்டோறிய ஏரி வரைக்குமுள்ள காடுகளில் இவை வாழ்கின்றன. இவைகளை இலகுவாகப் பிடித்துவிடலாம். மிருகக் காட்சி சாலைகளில் இவை சொகுசாக வாழ்கின்றன. சில சமயம் மிருகக் காட்சிசாலை பராமரிப்பாளர்களுடன் நெருக்கமாகப் பழகிவிடும் இக் குரங்குகள் அவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டால் கண்ணீர் விட்டு அழுதுவிடுவதைக் காணலாம்.

இவை சமவித தனித்தனி சப்தங்களை எழுப்புகின்றனவென்றும் இதை ''சிம்பன்சி மொழி'' என்று கூறலாம் என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றார்கள்.

தரையில் அவை நடக்கின்றன, ஓடும்போது அவை நான்கு கால்களையும் பாவிக்கின்றன. பெரும்பாலான ஆண் சிம்பன்சிகள் 70 கி.கி. எடையில் இருப்பதுண்டு. 1.5 மீ. உயரமிருப்பதுண்டு.

[illegible]

# வாழ்வில் நான்கு எழுத்துக்கள்

நான் ஒரு புத்தகத்தில் மூன்று எழுத்தின் முக்கியத்துவத்தைப் படித்துவிட்டு அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய சிநேகிதி ஒருத்தி என்னை எதற்காகவோ முட்டாள் என்ற சொல்லால் திட்டிவிட்டுப் போனாள். அப்போது திடீர் என எனக்கு ஒரு யோசனை தோன்றியது. சிநேகிதி என்ற சொல்லில் 4 எழுத்துக்களும் உள்ளன. ஆதலால் 4 எழுத்துக்களைப் பற்றி கட்டுரை என்ற 4 எழுத்தை எழுதத் தொடங்கினேன். சிந்தனை என்ற 4 எழுத்துப் பிறந்தது. உலகம் என்ற 4 எழுத்திலே மனிதன் என்ற 4 எழுத்து பிறந்து அல்லும் பகலும் உழைத்தும் ஊதியம் என்ற 4 எழுத்தின் குறைவால் இன்பம் என்ற 4 எழுத்துக் கிடைப்பதில்லை. ஆதலால் அல்லல் என்ற 4 எழுத்தை அனுபவிக்கிறான். கண்ணாடி என்ற 4 எழுத்தைப் போன்ற உள்ளம் என்னும் 4 எழுத்தில் உடைசல் என்ற 4 எழுத்து ஏற்படுகின்றது. வாழ்க்கையில் வெறுப்பு என்ற 4 எழுத்து ஏற்பட்டு இறப்பு என்ற 4 எழுத்தைத் தழுவுகின்றான். பெற்றோர் என்ற 4 எழுத்தின் சொற்படி பணிதல் என்ற 4 எழுத்தை ஏற்று ஒழுகுதல் வேண்டும். புன்னகை என்ற 4 எழுத்துத் தவழ தியாகம் என்ற 4 எழுத்தை மனதில் கொண்டு கண்ணகி என்னும் 4 எழுத்து பத்தினிபோல் திகழ வேண்டும். இலங்கை என்ற 4 எழுத்தின் பண்பாடு என்ற 4 எழுத்துக்கு ஏற்ப வாழ வேண்டும். இதற்கு மேல் எனக்கு எழுத ஊக்கம் என்ற 4 எழுத்து இல்லை. ஏனென்றால் வாசகர் என்ற 4 எழுத்தைக் கொண்டவர்களுக்கு இதைப் படிக்கும் போது சலிப்பு என்ற 4 எழுத்து ஏற்பட்டுவிடும்.

சு.கல்பனா, கொடிகாமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.இந்துக் கல்லூரியில் 35 வருடங்கள் சேவையாற்றி

# 17.09.2008இல் ஓய்வுபெறும் பிரதி அதிபர்

## திரு. பொன்னுச்சாமி மகேஸ்வரன் B.Sc. (Hons) Dip. in Education

அவர்களைப் **பாராட்டி வாழ்த்தி வழங்கும் வாழ்த்துகள்**



கல்வி கலையொளி கோண்டாவில் பதி சிறந்த
பொன்னுச்சாமி தம்பதிகள் பேர்விளங்கும்
கல்வி வல்லோன் யாழிந்துவின் மைந்தர்கள் உயர்கல்வி
ஊட்டிய கணித ஆசான் மகேஸ்வரன்
அல்லும் பகலும் அயராது உழைத்து கடமை கண்ணியம்
கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த
வல்லவனே எங்கள் மாமா கல்வியுலகம் கவினுறப்
போற்றும் பேறும்பெற்றனை வாழி! வாழி!

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் அரிச்சுவடி
படித்து கொக்குவிலிந்துவில் கல்விப்பயிர் வளர்த்து
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டமும் பெற்று
முப்பதொடு ஐந்தாண்டுச் சேவைதனை
யாழிந்துவில் தப்பாதே நல்கி கணிதநல் லாசிரியனாய்
உப அதிபராய் சேவை புரிந்தனை வாழி!
உளம்மகிழ்ந்தோம் உயர்வுகள் பலபெற்று உவந்துவாழி!
நாடும் ஏடும் உன்புகழ் பாட நலமுடன் நீடுவாழி!

கருணை மிகுந்து கடமையில் சிறந்தனை வாழி!
கல்லூரியின் வளர்ச்சியில் உயர்ச்சி கண்டனை வாழி!
விருப்புடன் பயன்தரு கணிதபாடத்தினை மாணவர்கற்று
உயர்ந்திடச் செய்தனை வாழி!
பெருமை கண்டு பெற்றோர் மகிழ்ந்தனர் உடன்பிறப்புகள்
உவகை கொண்டனர் உவந்து நீ வாழி!
பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்று இல்லறச்சிறப்புடன்
பல்லாண்டு காலம் வாழி! வாழி!

(78495)

பாராட்டி வாழ்த்துவோர்:
மருமக்கள்:
**இ.இராஜசேகரன், இ திருக்குமரன்**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் சின்னப்பு குணரத்தினம்**
(முன்னாள் மின்னிணைப்பாளர், வலி.கிழக்கு பிரதேசசபை)

தோற்றம் 20.02.1948 — மறைவு 18.08.2008

கடந்த 18.08.2008 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (17.09.2008) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.50/32, பூமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(78496)

---

## பண்டிதப் பரீட்சைகள் அடுத்த மாதம்

யாழ்ப்பாணம், செப்.17

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கப் பண்டித, பால பண்டித பரீட்சைகள் அடுத்த மாதம் 4, 5, 6,7 ஆகிய திகதிகளில் கீழைத் தேயக் கல்விக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இல.223, கே.கே.எஸ் வீதியில் உள்ள பணிமனையில் தொடர்புகொள்ளலாம் என்றும் சங்கச் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தெரிவித்துள்ளார்.

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**அன்புமலர் பேரின்பநாயகம்**

தோற்றம் 17.03.1946 — உதிர்வு 09.09.2006

திதி: துதியை (17.09.2008)

தங்கள் உறவைப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு கழிந்தாலும்
பாசத்தின்
நிறைகுடமாய் பரிவுடன்
எம்மை வளர்த்து கல்வியூட்டி
ஆளாக்கிப் பாரினில் அன்புடன்
வாழ எமக்கு வழிகாட்டிய
உங்கள் நினைவுகள் எங்கள்
பயணத்தின் அழியா இடம்பிடிக்கும்.

உங்கள் நினைவில் வாழும்:
**கணவர், மகள்மார், மருமக்கள்.**

'அன்னை இல்லம்', தாவடி, கொக்குவில்.
(78521)

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
03 . 06 . 1960

மறைவு
18 . 08 . 2008

## அமரர் இராசலிங்கம் லோகானந்தம்

கடந்த 18.08.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராசலிங்கம் லோகானந்தம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிருத்தியமும் இன்று (17.09.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலம்பரை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

**குடும்பத்தினர்.**
(78488)

---


# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 2228250, 0777 222422 Website : www.ceiit.info email : info@ceiit.info

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2008** 80% off

| Course | Fee | Duration |
|---|---|---|
| Diploma in Computer Science | 2,150 | 4 Months |
| Honours Dip in Computer Science | 2,600 | 5 Months |
| Diploma in Web page Designing | 2,150 | 4 Months |
| Diploma in Graphic Designing | 2,150 | 4 Months |
| Diploma in Desktop Publishing | 2,000 | 4 Months |
| Dip in Hardware Engineering | 2,000 | 3 Months |
| Diploma in Microsoft Office | 1,500 | 3 Months |
| Dip in Auto CAD | 2,000 | 3 Months |
| Accounting Package | 2,150 | 2 Months |

50% OFF

| Course | Old fee | Fee |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |
| Diploma in Networking | ~~10,000~~ | 5,000 |

ஆரம்பம் :
Batch I : 19/09/2008 10AM
Batch II: 20/09/2008 10AM
Batch III: 21/09/2008 02PM
Batch IV: 24/09/2008 02PM

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் பொருத்தமான கற்கை நெறியை தேர்ந்தெடுத்து விடுமுறைகாலத்தை பயனுள்ளதாக்கிக்கொள்ளுங்கள்.

---- [illegible] முந்துகொள்ளவும் .----


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# திருமதி சிவகாமி மகாதேவன்

## (ஓய்வு பெற்ற தபாலதிபர்)

## (முன்னாள் அறங்காவலர் சபை உறுப்பினர் - நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்)

நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை (மெனிங் பிளேஸ்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவன் சிவகாமி 11.09.2008 வியாழக்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி மகாதேவன் (ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகரும், கொழும்பு R.P மொனபல் உரிமையாளரும்) அவர்களின் பாசமிகு மனைவியும் சத்தியரூபனின் (M.S.R. - Accounting U.K) பாசமிகு தாயும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான ஆதீனகர்த்தா காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தில்லைவனம் தம்பதியினரின் பாசமிகு மகளும் நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வுபெற்றவர்களான தபாலக ஊழியர் சின்னத்தம்பி - பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராஜா, ஓய்வுபெற்ற தபாலதிபர் செல்லத்துரை, இராசம்மா, கணபதிப்பிள்ளை, கந்தையா, செல்லம்மா, கார்த்தியேசு, கதிரேசு, நாராயணபிள்ளை, ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் விசுவலிங்கம், சிவபாக்கியம் மற்றும் ஓய்வுபெற்ற தபாலதிபர் இராசரெத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லோகேஸ்வரி, ஓய்வுபெற்ற வைத்தியசாலை காவலாளி பாலசிங்கம் (இந்தியா), ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துநர் சண்முகநாதன், தில்லைநாதன் (நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஓய்வுபெற்ற ஊழியர்), சித்சபாநாயகி, கருணாமூர்த்தி (சுவிஸ்), வசந்தகுமாரி, உதயகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2008) புதன்கிழமை அவரது நயினாதீவு இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சல்லிப்பரவை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**சி.மகாதேவன்**
(கணவர்).

*3ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.*

(78525)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## பாலசுப்பிரமணியம் சனாதன் (சனா)

(பழைய மாணவன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி;
குடிசார் எந்திரவியல், 2ஆம் வருட மாணவன், யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி)

திதி: அபரபக்க திருதியை (17.09.2008)

படைப்பு
13
.
11
.
1984

பதிப்பு
29
.
09
.
2007

ஔவியம் ஏதுமற்ற ஔடதமே சனாதா!
அன்பு மகனே! அறிவுச் செல்வமே சனாதா!
ஆண்டொன்று கடந்தாலும் ஆறமுடியாதையா!
இடர்களைவாய் என்ற கனா இலவங்காயானதையா!
ஈன்ற மனம் பொறுக்குதில்லை ஈனர்களின் செயலை
உற்றோரும் மற்றோரும் உள்ளம் நெகிழ்ந்துருக
ஊரார் தவித்து நிற்க ஊர்வலமாய் சென்றாயோ?
எங்கே ஐயா சென்றாய் எங்களைத் தவிக்க விட்டு
ஏங்கித் தவிக்கின்றோம் ஏதிலிகள் ஆகிவிட்டோம்
ஐங்கரனே துணை என்பாய் ஐஸ்வரியம் வேண்டாம் என்பாய்
தும்பிக்கை துணையிருக்க கூற்றுவனும் தொடர்ந்தானோ?
வெம்பி அழுகின்றோம் வேதனையால் சாகின்றோம்
தம்பி சனாதன் நிற்கிறானிங்கென்று
நம்பி நம்பி எங்கும் பார்க்குமொரு பிரேமை எமக்கு
ஓங்கிடுவாய் நீயென்று ஓலையைப் பறித்தானோ காலன்
ஈங்கிதனை எப்படி நாம் பொறுத்திடுவோம்
ஔவியம் ஏதுமற்ற ஔடதமே சனாதா!
வந்திடுவாய் ஓடி எம் கவலை களைந்திடுவாய்.

போ.பாலசுப்பிரமணியம்,
"கமலாம்பிகை பவனம்",
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

(78439)

---

28 ஆவது அகவையில் உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு நிலைதளர்ந்த

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
25.09.1980

## குலேந்திரமோகன் - சுதாகர் (கண்ணன்)



இறப்பு:
23.09.2007

திதி:- துதியை 17-09-2008

இதயத்தில் இறையாகி உள்ளத்தில் உயர்வாகி எங்கள் வாழ்விற்கு
வழிகாட்டிய கண்ணாவே!
கண்ணா உங்கள் இனிய நினைவுகள்
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது
முத்தான உங்கள் முழுநினைவுகள் நித்தமும்
எம் நெஞ்சிலே நிழலாய் தொடர்கின்றன
கண்ணா உங்கள் பிரிவு நிஜமா? கனவா?
என நினைக்கத் தோன்றுகின்றது
பார்க்குமிடங்கள் எல்லாம் நீக்கமற
நிற்கின்றது நீ நினைவுகள்
ஆனந்தமாய் வாழ்வுதனை வாழ்ந்து வர எம்மை
நடுவழியில் பரிதவிக்கவிட்டு தனிவழி சென்றதேனோ!
பிரிவை எமக்குள் புதைத்துவிட்டு வெகுதூரம்
பிரிந்து சென்றுவிட்டீர்களே கண்ணா!
துவளும் உங்கள் நினைவுகள் எம் மனதை
உருக்குலைய வைக்கின்றது கண்ணா!
துடிக்கும் எம் இதயம் உங்கள் பெயர் சொல்கிறது கண்ணா!
எங்கள் இருவிழிகளிலும் கண்ணீர் மழை
இன்னும் ஓயவில்லை கண்ணா!
மீண்டும் நீங்கள் வருவீர்கள் என
காத்திருக்கின்றோம் கண்ணா!
உங்கள் அழியாத நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில்
அணையாத தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவே எங்கள் நினைவு

உயிர் உள்ளவரை என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:

மனைவி, பிள்ளைகள்.
[illegible] ரத்னா, கெங்கேஸ்வரி,
[illegible] துஷன், பிரவீன், சத்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தான் பொறுப்பேற்ற கடமையை கொழும்பு நிறைவு செய்யுமா?

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளைத் தவிர ஏனைய அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகள் மற்றும் ஐ.நா. உப அமைப்புகள் ஆகியவையும், அவற்றின் அலுவலர்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் உள்ள அந்தந்த அமைப்புகளின் அலுவலகங்களை மூடிவிட்டு அங்கிருந்து வெளியேறும் நடவடிக்கை பூர்த்தியடைந்து விட்டது.

அந்த அமைப்புகளும் அவற்றின் பிரதிநிதிகளும் அங்கு தங்கியிருப்பதற்கான பாதுகாப்பு உத்தரவாதத்தைத் தாங்கள் வழங்க முடியாது என்று அரசுத் தரப்பு அறிவித்தமையையும் -

இத்தகைய அமைப்புகள் மேற்கொண்டுவந்த அவசர, அவசிய மனிதநேய நடவடிக்கைகளைத் தான் பொறுப்பேற்பதாக அரசுத் தரப்பு பிரகடனப்படுத்தியமையையும் -

அடுத்தே, மேற்படி தொண்டர் அமைப்புகள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களின் வெளியேற்றம் இடம்பெற்றிருக்கின்றது.

அந்த அமைப்புகளுக்கும் அவற்றின் பிரதிநிதிகளுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது என்றும், அத்தரப்புகள் தொடர்ந்து அங்கு தங்கியிருந்தால் நேரக்கூடிய ஆபத்துக்குத் தாம் பொறுப்பேற்க இயலாது என்றும் இலங்கை அரசும் அதன் பாதுகாப்பு அமைச்சும் வெளிப்படையாகவும், தெளிவாகவும், திட்டவட்டமாகவும் அறிவித்த பின்னர் இந்த அமைப்புகளினால் அங்கிருந்து உடனடியாக வெளியேறுவதைத் தவிர, வேறு எதுவும் செய்யமுடியாது என்பது புரிந்துகொள்ளத்தக்க யதார்த்தமே.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மீது இலங்கை அரசுப் படைகள் பெரும் போர் ஒன்றைத் தொடுத்துள்ள நிலையில் அங்கு மக்கள் லட்சக் கணக்கில் இடம்பெயரும் பேரவலம் நேர்ந்துள்ளது. வன்னியில் 'ஏ 9' வீதிக்கு மேற்கே ஏற்கனவே சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் பேர் அண்மைக் காலத்தில் அகதிகளாக இடம்பெயர்ந்து ஏதிலிகளாக அல்லற்படுகின்றார்கள்.

அத்தகையோரின் அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்யும் உயரிய பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர் அமைப்புகளே குறுகிய கால அறிவித்தலில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றன.

வன்னியை முழுமையாகக் கைப்பற்றும் மூர்க்கத்தில் இலங்கை அரசுத் தரப்பு மிகத் தீவிரமாக இருப்பதால், அங்கு மக்கள் தத்தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறி அகதிகளாகி அல்லற்படுவதும் அதையொட்டி மனிதப் பேரவலம் உருவாவதும் தவிர்க்க முடியாத துன்பியல் நிகழ்வுகளாக மேலும் தீவிரமடையப் போகின்றன என்பதே பலரது மனதையும் நெருடும் அச்சமாகும்.

ஆனால் அத்தகைய நெருக்கடி உருவாகும்போது சர்வதேச சமூகம் எப்படி பிரதிபலிப்பைக் காட்டப் போகின்றது என்பதுதான் கேள்வியாகும்.

இலங்கை அரசு, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து ஐ.நா. அமைப்புகள் மற்றும் சர்வதேச, உள்நாட்டுத் தொண்டர் அமைப்புகளை வெளியேறச் சொன்னதும் பெரிய பிகு பண்ணாமல் - அதிக இழுபறி பண்ணாமல் - அவை உடனடியாக வெளியேறத் தீர்மானித்தமைக்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு.

அரசின் அதிகார பீடம் வெளியிட்ட உத்தரவு அது என்பதிலும் பார்க்க, அங்கு பேரவலத்தைச் சந்தித்து நிற்கும் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை - மனித நேயத் தேவைகளை - ஓர் அரசு என்ற முறையில் தான் முற்றாகப் பொறுப்பேற்பதாக அந்த அரசு அறிவித்திருக்கின்றது என்பதே பிரதான விடயமாகும்.

தான் சர்வதேச சமூகத்துக்கு உறுதி அளித்து ஏற்றுக்கொண்டுள்ள இந்தப் பொறுப்பை - கடமையை - கொழும்பு நிறைவு செய்யுமா என்பதில்தான் எல்லாம் தங்கியுள்ளது.

வெளியேறுங்கள் என்று அரசு உத்தரவிட்டதும் வன்னியிலிருந்து மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு நடையைக்கட்டிய ஐ.நா. நிறுவனங்களும், உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளும் மற்றும் அவை உள்ளிட்ட சர்வதேச சமூகமும் இனிமேல் வாயை மூடிக்கொண்டு வெறுமனே - சும்மா - இருக்கப்போவதில்லை.

அதிரும் யுத்த பூமியாகியிருக்கும் வன்னியில் எழுந்துள்ள - இனித் தீவிரமடையப்போகின்ற - மனிதாபிமான நெருக்கடிகளையும் மனிதப் பேரவலங்களையும் சமாளித்து, தான் பொறுப்பேற்ற மனிதநேயப் பணியை இலங்கை அரசு எப்படிக் கையாள்கின்றது, அதில் எத்தகைய தவறுகளை இழைக்கின்றது, அந்தத் தமிழர்களை எப்படி நடத்துகின்றது என்பன போன்ற விடயங்களைக் கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு அவை நோக்கும் என்பது நிச்சயம்.

யுத்தப் பிரதேசத்தில் வதியும் தமிழ் மக்களின் அவசர, அத்தியாவசிய மனிதாபிமானப் பணிகளைக் கவனித்து வந்த தொண்டர் அமைப்புகளை விரட்டியடித்துவிட்டு, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாக அறிவித்த இலங்கை அரசு, அதில் விட்டேத்தியாக நடக்கும் எனில், சர்வதேச சமூகம் மற்றும் ஐ.நாவின் கடுங் கண்டனத்துக்கும், விமர்சனத்துக்கும், அது தொடர்பான விபரீத பின்விளைவுகளுக்கும் கூட அது உள்ளாக நேரும்.

ஆனால் தான் பெறுப்பேற்றுள்ள கடமையை கொழும்பு அரசாங்கம் நிறைவேற்றும் என்பதில் தமிழ்மக்களுக்கு துளிகூட நம்பிக்கை இல்லை.

# 1982 இல் இருந்த சனத்தொகைக் கணிப்பீட்டின் படியே யாழ்.பல்கலைக்கழக மாணவர் அனுமதி நிர்ணயிக்கப்படுகிறது

## தற்போதைய நிலையை ஒப்பிட்டால் குறைந்த எண்ணிக்கையான மாணவரே அனுமதி பெறுவர் என்கிறார் பேராசிரியர் சமரநாயக்க



யாழ்.குடா நாட்டின் சனத்தொகையைப் பொறுத்து பல்கலைக்கழகத்துக்கான மாணவர் அனுமதி நிர்ணயிக்கப்படின் குறைந்தளவு எண்ணிக்கையினரே உள்வாங்கப்படுவார்கள். எனினும் எமது சட்ட வரையறைக்கிசைய 1982 இல் இருந்த சனத்தொகைக் கணிப்பீட்டின்படி அந்த விகிதத்திற்கும் குறையாத தொகையில் மாணவர்கள் தெரிவாகவேண்டும் என்பதில் கவனமாக உள்ளோம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எந்தவொரு பாகுபாடுமின்றி மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே நாம் செயற்படுகிறோம்.

'இசற் ஸ்கோர்' புள்ளியால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது எனக் கேட்டதற்கு, இசற் புள்ளி என்பது யாழ்ப்பாண மக்கள் மட்டுமின்றி நாட்டில் உள்ள அனைத்து மாணவர்களும், பெற்றோர்களும் கேட்கும் ஒன்றுதான். கூடுதலாக மருத்துவத்துறைக்கு விண்ணப்பித்தவர்கள் தான் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றார்கள். இதன் மூலம் இன, மத, மொழி வேறுபாடுகளுடன் நாங்கள் மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதில்லை. இசற் புள்ளி அடிப்படையில் 40 வீதம் மாணவர்களையும் சனத் தொகை ரீதியாக 55 வீத மணவர்களையும் கஷ்டப் பிரதேசங்களில் இருந்து 5 வீத மாணவர்களையும் உள்ளீர்க்கின்றோம். இது 1985 ஆம் ஆண்டு குடிசனக் கணிப் பீட்டின் அடிப்படையிலேயே இடம்பெறுகிறது.

தென் பகுதியில் இருந்து யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள் இங்குவராததால் அந்த வெற்றிடங்களை யாழ். மாணவர்களைக் கொண்டு நிரப்பக் கேட்கிறார்கள். பல்கலைக்கழகத்தில் வெற்றிடம் என்று எதுவும் இல்லை. நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் பீடங்கள் மூலம் நாம் வெற்றிடங்களைப் பெற்றபோது 2008 இற்கான அனுமதிக்கு 19 ஆயிரத்து 500 இடங்கள் இருந்தன. ஆயினும் இம்முறை 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் 21 ஆயிரத்து 200 மாணவர்களே பதிவு செய்துள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குப் போக முஸ்லிம் மாணவர்கள் விரும்புகிறார்களில்லை. பல்கலைக்கழக மாணவர்களிடம் பிரதேச வேறுபாடுகள் இருப்பது ஏற்புடையதல்ல. சகல இன மாணவர்களும் எந்தப் பல்கலைக்கழகத்திலும் தமது கல்வியைத் தொடர முன்வர வேண்டும் என்பதே எனது கருத்தாகும். இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் மிகவும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இலங்கையில் கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். கல்விச் சுதந்திரமும் சுதந்திரமான கல்வியும் வழங்க வேண்டும்.

### சூழல் மாறினால் யாழில் சட்டத்துறை

சட்டத்துறைக்குத் தெரிவாகும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் கற்கக் கூடிய சூழல் இல்லை. சூழ்நிலை மாறும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் சட்டத்துறையை உருவாக்கி மாணவர்களுக்கு வசதிகள் செய்யப்படும். பேராதனை பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை உருவாக்கப்படவுள்ளது. அங்கு யாழ். மாணவர்கள் கற்க முடியும். வேலை வாய்ப்பு என்ற பிரச்சினை சட்டத்துறையில் இல்லாததால் கூடுதல் மாணவர்கள் அதனைப் பயன்படுத்த முடியும். பல்கலைக் கழகங்களில் உள்ளக வசதிகளை அதிகரிப்பதன் மூலம் இனிவரும் காலங்களில் கூடுதல் மாணவர்களை உள்வாங்கக் கூடியதாக இருக்கும்.

தென்னாசியாவில் இலவச கல்வியுள்ள ஒரேயொரு நாடு இலங்கை. பல்கலைக்கழகக் கல்வியை மேம்படுத்த ஆசிரியர் கல்வியை 8 வருடங்களாக அதிகரிக்கச் செய்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் கல்வித்துறை பாதிக்கப்படுகிறது எனக் கூறப்படுகிறது. இதுவரை வெளிநாடு சென்ற 550 ஆசிரியர்கள் வரை மீளத் திரும்பவில்லை.

தென்னிலங்கை ஊடகங்கள் தென்பகுதி மாணவர்கள் இங்கு வந்து கற்கக் கூடிய சூழல் இல்லை எனக் கூறும் போது யாழ்.ஊடகங்கள் அதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை. தென்னிலங்கை மாணவர்கள் இங்கு வந்து கற்பதற்கான சூழல் இல்லை என்ற ஊடகங்களின் கருத்தை யாழ். ஊடகங்கள் மறுதலிக்க வேண்டும். பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அதற்கான பொறுப்பை உணர்த்துவதில் ஊடகங்கள் பங்களிக்க வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் யாவும் இலங்கை பல்கலைக்கழகங்கள் எனப் பார்க்க வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமிழ் மாணவர்களுக்கு, தென்னிலங்கைப் பல்கலைக்கழகம் சிங்கள மாணவர்களுக்கு, கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் மாணவர்களுக்கு என்று தப்பான கனவுகளில் இருக்கக்கூடாது. நான் ஜெயவர்தனபுர, சப்ரகமுவ பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த ஏனைய பல்கலைக் கழகங்களுக்குச் சென்றிருக்கிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வந்தபோது தான் பல்கலைக்கழகத்தின் சிறப்பை உணர முடிகிறது. நீண்ட காலமாக இங்கு வரவேண்டும் என்ற எனது விருப்பம் நிறைவேறியுள்ளது. யாழ்ப்பாணத்திற்குத் தெரிவான தென்பகுதி மாணவர்களில் யாராவது ஒருவர் யாழ்ப்பாணம் செல்லத் தயார் என்றால் அவர்களுடன் கூட நானும் வரத் தயார் என்றும் கூறியிருந்தேன்- என்றார் பேராசிரியர் காமினி சமரநாயக்கா.

சந்திப்பின்போது யாழ்.பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், பேராசியர் இரா. சிவசந்திரன் ஆகியோரும் உடனிருந்தனர். (50-111)

### தென்மராட்சி வலய

# பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவை யுனிசெப் நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், செப்.17

'யுனிசெப்' நிறுவனத்தினரால் கடந்த வருடம் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களுக்குரிய கொடுப்பனவுத் தொகையினை வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கியுள்ளனர்.

வேலைத்திட்டங்களை முன்னெடுத்த ஒப்பந்தகாரர்களை வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 26 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களுக்கென 35 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பணவு வழங்கப்படாதது குறித்து கடந்த மாதம் 'உதயனில்' செய்தி வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# பருத்தித்துறை, தும்பளை பிரதேசங்களில் வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சி

நல்லூர்,செப்.17

கடற்றொழில் நீரியல் வளத் திணைகளம் பருத்தித்துறை, தும்பளை ஆகிய பிரதேசங்களில் வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சிகளை நடத்துகின்றது.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கென 'நெக்டெப்' திட்டத்தின் கீழ் 7 லட்சத்து 94 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தும்பளை தொழில் பயிற்சி நிலையத்தில் தற்சமயம் முதலாவது தொகுதியினருக்கான பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றன. 30 பயிற்சியாளர்கள் பயிற்சிபெற்று வரும் குறிப்பிட்ட பயிற்சி நெறியை பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ் வில் நிகொட் திட்ட பிரதிப் பணிப் பாளர் எஸ்.வீரபத்திரப்பிள்ளை, மீன்பிடித் திணைக் களம் நெக்டெல் உத்தியோகத் தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக் கிழமை வரை இப்பயிற்சிநெறி வழங்கப் படும்.

இரண்டாவது பயிற்சிநெறி வல்வெட்டித்துறையில் இடம்பெறும் என்று யாழ். கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (202-111)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 02 | 18.09.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 11.12வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | மு.இ. 9.33வரை |
| சுபநேரம் : | 07.33 - 09.03 |
| ராகுகாலம் : | 01.33 - 03.33 |

# யாழ்.பிரதேச செயலக முகாமைத்துவப் போட்டியில் தெரிவான கி.அலுவலர்கள்

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்.பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கு இடையிலான முகாமைத்துவப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாம் இடத்தை நாவாந்துறை வடக்கு(ஜே/8[illegible]) கிராம அலுவலர் நா.சுந்தரராஜனும் இரண்டாம் இடத்தை சிறாம்பியடி (ஜே/79)கிராம அலுவலர் வீ.தில்லை நடராஜா மூன்றாம் இடத்தை வண்ணார்பண்ணை (ஜே/82) கிராம அலுவலர் என். சபாரத்தினமும் பெற்றுக் கொண்டனர். (202-111)

### பதவியுயர்வுப் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகள்

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு 1, அதி சிறப்புத் தரம் மற்றும் இலங்கை நிர்வாக சேவை ஆகிய பதவியுயர்வுப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர்களுக்கென பிரத்தியேக வகுப்புகளை வார விடுமுறை நாள்கள் மற்றும் பொது விடுமுறை தினங்களில் நடத்தப்படவுள்ளன.

விசேட வகுப்புகளை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக மேற்குறித்த பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருக்கும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைகளைச் சேர்ந்தவர்கள் தமது அலுவலக மற்றும் நிரந்தர வதிவிட முகவரிகள் உட்பட தேவையான சகல விவரங்களையும் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. "தலைவர், மத்திய- மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கம்", மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்து

5 ஆவது பிறந்தநாள் 4 ஆவது பிறந்தநாள்

## 17.09.2008







"அம்பாள் அகம்", சரசாலை மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த **திரு.திருமதி விசாகன் ஜெயகௌரி** தம்பதிகளின் ஏகபுத்திரி **வி.சயந்தவி** தனது 5 ஆவது பிறந்தநாளையும் ஏகபுத்திரன் **வி.பபீசனன்** தனது 4 ஆவது பிறந்தநாளையும் 17.09.2008 புதன்கிழமை தமது இல்லத்தில் தங்கை மாதங்கியுடன் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, மாமா குடும்பம், சித்தப்பா, சித்தி, பெரியப்பா, பெரியம்மாமார், அண்ணாமார்களான தர்மேந்திரா, எஜிதரன் ஆகியோர் சரசாலை இராமாவில் பிள்ளையார் அருளுடன் சீரும் சிறப்பாகவும் வாழ வாழ்த்துகிறார்கள்.

**"அம்பாள் அகம்"**
**சரசாலை மத்தி., சாவகச்சேரி.**

தகவல்:
**இ.விசாகன் (அப்பா)**

# ஒரே சிப்பிக்குள் 26 முத்துக்கள்!



டிர், செப்.16

லெபனாலிலுள்ள ஓர் உணவு விடுதியில் சமைப்பதற்காக உடைக்கப்பட்ட சிப்பிக்குள் 26 முத்துக்கள் இருந்தன. லெபனானில் பெரும்பாலும் உணவுச் சிப்பிகள் சாப்பிடும் வழக்கம் கிடையாது. ஆனால் இச்சிப்பிக்கள் தென் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

தென் லெபனானில் நிலை கொண்டுள்ள ஐ.நா. அமைதி காக்கும் படையில் உள்ள பிரான்ஸ், இத்தாலி வீரர்களுக்கு இவை சமைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இவர்கள் இவற்றை விரும்பி உண்கிறார்கள்.

டிர் நகரின் தென் துறைமுகப் பகுதியிலுள்ள ஓர் உணவு விடுதியில் சிப்பி உணவுகள் தயாரிக்கப்பட்டு, பரிமாறப்பட்டு வருகின்றன. இந்த விடுதியின் உரிமையாளர் சமையற் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டு விடுவார்.

உரிமையாளருக்கு, அவரின் 50 வயது தயாரான அமல் சல்ஹாவும் உதவி வருகின்றார். தென் லெபனாலில் உணவுச் சிப்பிகள் ஒருகிலோ 400 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. உரிமையாளரின் தாயார் ஞாயிற்றுக்கிழமை, சமைப்பதற்காக ஒரு சிப்பியை உடைத்தார். வியப்பில் அவர் கூச்சல் போட்டு விட்டார்.

உடைத்த சிப்பிக்குள் 26 முத்துக்கள் இருந்தன. அவை, திராட்சைக் கொத்தைப் போல, பல்வேறு வடிவங்களில் ஜொலித்தன. எண்ணிப்பார்க்கும் போது 26 முத்துக்கள் இருந்தன. அமல் சல்ஹா வியப்பில் அதிர்ந்து போனார்.

ஒரு சிப்பியில் ஓரிரு முத்துக்களே இருக்கும். ஆனால் ஒரே சிப்பிக்குள் 26 முத்துக்கள் இருக்கின்றமை மிகமிக அபூர்வம். அமல் சல்ஹா இதை கின்னஸ் விருதுக்காக விண்ணப்பித்துள்ளார்.

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்



எமது பேரன்பிற்குரிய ஆசிரியை
**திருமதி நவலட்சுமி சந்திரகுமார்**
அவர்கள் ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலைக்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்வதையிட்டு மிகப் பெருமையடைகிறோம். அவர் மேலும் பல சிறப்புகள் பெற்று குடும்பத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (சி/554684) **அயலவர்கள்.**

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் குறைந்த விலையில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். சில்கி, பன்டம் அடை முட்டைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

A.T.S பாம், K.K.S. றோட் தாவடி.

## வீடியோ கசெற்றுக்கள், சிடிக்கள் விற்பனை

பழைய புதிய சினிமாப்பட வீடியோ கசெற்றுக்களும், C D க்களும் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு:- K.R.வீடியோ,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (78490)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம் தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

உதயன் பாம் நாயன்மார்கட்டு (முறிவு நெரிவு வைத்தியசாலைக்கு அருகில்)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நவரட்ணராஜா வீதியில் உள்ள 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: பபு கொமினிக்கேசன்,
இல.03, வளாகவீதி,
திருநெல்வேலி. (சி/554879)

## வீடு வாடகைக்குத் தேவை

கோண்டாவில் தாவடி, கொக்குவில் மற்றும் யாழ்.மாநகர சபையை அண்டிய பகுதிக்குள் மூன்று பேர் கொண்ட கௌரவமான சட்டத்தரணி குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: விளம்பர இல.3142
மே/பா.உதயன்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 27 |
| 10 | | 09 |
| 1952 | | 2007 |



**திருமதி மாசிலாமணி தங்கச்சியம்மா (இராசாத்தி)**

பாசமெனும் மழை பொழிந்து பக்குவமாய்
நாம் மிளிர பல வழி செய்த தெய்வமே!
சிந்தனைகள் விதைத்து வைத்தீர்
ஆதலினால் நாம் உயர்ந்தோம்
எம் முயர்வு காணா உங்கள் உயிர் பிரிந்ததேனோ?
தேம்புகின்றோம் இன்றும் நாமே!

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு. (78516)

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

## மணமகன் தேவை

யாழ். இந்து, அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கையில் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது Australia வில் குடியுரிமையுடன் வசித்துவரும் 36 வயதுடைய மணமகளுக்கு நன்கு படித்த, தகுந்த மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேடுகின்றார்கள்.
தொடர்பு:-
இலங்கையில்:
077 9361429
ஆஸ்ரேலியாவில்:
0661425290426
(சி/554625)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 19 |
| 06 | | 08 |
| 1920 | | 2008 |



**திருமதி செல்லத்துரை திரவியம்**

19.08.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி செல்லத்துரை திரவியம் அவர்களின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (18.09.2008) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (78503)

**குடும்பத்தினர்.**

## சென்.ஜேம்ஸ் ம.வியில் மீட்டல் வகுப்புகள்

குருநகர், செப்.17

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் மாலை நேரங்களில் மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஆர்.எஸ்.வி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இவ் வகுப்புகள் தினமும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் நடைபெறும்.

மாணவர்கள் இவ் வகுப்புகளில் பங்கு கொண்டு தமது கல்விச் செயற்பாடுகளை வளம்படுத்திக் கொள்ளலாம் என குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா ஆர்.எச். சகா யநாயகம் அடிக [illegible] (202-51)

## பாராட்டுதலும் வாழ்த்துதலும்



**திரு.கார்த்திகேசு ராமஜயம்**
B.Dev.S, P.G.D In Edu,
M.A (Dev.stu)
(அதிபர், யா/தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலை)
யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்தி கற்கை நெறியில் அதிவிசேட சித்தி (Distinction Pass) பெற்றமைக்காக இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் மேன்மேலும் உயர்வுபெற்று அதிபர் பணியில் சிறந்த சேவையாற்றப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள்,**
யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை. (சி/554681)

## மரண அறிவித்தல்



**வேலுப்பிள்ளை மகேந்திரன் (K.V.M)**
(உரிமையாளர்: செந்தில் அச்சகம்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகேந்திரன் 10.09.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.09.2008) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"லாவண்யம்" கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P. 0112365077 (78523)

தகவல்:
**இராசநாயகம் குடும்பம்**
(கிரியோன் கூல்பார்)


## STUDY IN UKRAINE (EAST EUROPE)

**MBBS/MD** With O/L'S - 7years
With A/L' - 6years

**LUGANSK STATE MEDICAL UNIVERSITY**
*Recognized By Sri Lankan Mdical Council*

**100% VISA SUCCESS**

எமது நிறுவனத்தின் மூலம் கடந்தமாதம் அனுப்பப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதுவித சிரமமுமின்றி VISA வை பெற்றதுடன் தற்போது UKRAINEஇல் தமது கல்வியை தொடர்கின்றனர். (Royal College Colombo, Hindu College Colombo, St.Patricks College Jaffna, St.John's College Jaffna St.Michael's College Batticaloa, Holy Family Convent Jaffna, Hindu Ladies College, Ramanathan Hindu Ladies School Adventist International College Vavuniya, Vavuniya Maha Vidyalayam. ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள்.

SPONSOR/ BANK BALANCE தேவையில்லை

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால் UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland, Romania, Austria , Italy, France, Spain, Germany.U.K. ஆகிய நாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

Call: 0777 -818/ (011) 4512591
scholinfo@yahoo.com

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo.06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதி மஹிந்தவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தவேண்டும்

## அண்ணா நூற்றாண்டு விழாவில் வைகோ ஆவேசம்

கொழும்பு, செப்.17

இலங்கையில் தமிழர்களை கூண்டோடு அழிக்க திட்டமிட்டு விட்டனர். ஆனால் விடுதலைப்புலிகளை போரில் வெல்ல முடியாது. அவர்களை அழிக்க முடியாது. இது போன்ற அக்கிரமங்களை செய்த எத்தனையோ உலக நாட்டு தலைவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். இதே போன்று இலங்கை ஜனாதிபதியும் நிறுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு ம.தி.மு.க.செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெற்ற மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழக அண்ணா நூற்றாண்டு விழாவில் பேசுகையிலேயே வைகோ மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப்புலிகளை தடைசெய்துள்ள அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'வாஷிங்டன்' பத்திரிகையில் ராஜபக்ஷ கூட்டம், இலங்கை தமிழர்களை அழிக்கின்றது எனச் செய்தி வெளிவந்துள்ளது.

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த வில்சன் என்பவர் 2 லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள் காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவிக்கின்றார். இவற்றை எல்லாம் நாம் மௌனமாக பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இலங்கைக்கு இந்தியாவில் இருந்து ராடர் கருவிகள் மட்டு



மல்ல விமானிகள் மற்றும் இராணுவத் தொழில்நுட்பவியலாளர்களையும் அனுப்பி இருக்கிறீர்கள். இதெல்லாம் கூலிப்படை போல் செயற்படுவதற்கு ஒப்பான செயலாகும். இதன் மூலம் இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு மத்திய அரசு துணை போயுள்ளது.

எனவே மத்திய, மாநில அரசுகளை எதிர்த்து மக்கள் சக்தியை திரட்டுவோம். - என்றார்.

# டில்லிக் குண்டுவெடிப்பு: மேலும் 4 தீவிரவாதிகள் கைது

டில்லியில் நடந்த தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பாக மேலும் 4 தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். குஜராத் பொலிஸார் கொடுத்த துப்புக் காரணமாக டில்லியில் இவர்கள் பிடிபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

டில்லியில் நடந்த தொடர் குண்டு வெடிப்புத் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர். குண்டு வைத்த தீவிரவாதிகளை நேரில் பார்த்த 5 சாட்சிகள் உட்பட 13 பேரைப் பொலிஸார் பிடித்துள்ளனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணைநடைபெற்றுவருகிறது. இதுகுறித்து டில்லியில் பொலிஸார் கூறுகையில், ''டில்லியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. குண்டு வெடிப்பு வழக்கில் சில குறிப்பிட்ட முக்கிய தடயங்கள் சிக்கியுள்ளன'' - என்றனர்.

விசாரணையின்போது, உத்தரப் பிரதேச மாநிலம் ஆழம்கார் என்ற இடத்தைச் சேர்ந்த காலித், ஹபீப், ஷா ஆலம் ஆகியோருக்கு தொடர்பிருப்பது தெரியவந்தது. இதையடுத்து உத்தரப் பிரதேச மாநிலத்துக்குத் தனிப்படை விரைந்தது.

சமீபத்தில் நடந்த குண்டுவெடிப்புகளைப் போலவே டில்லி குண்டுவெடிப்பும் இருந்ததால் குஜராத், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநில பொலிஸாருடன் இணைந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்தச் சூழ்நிலையில் டில்லி அருகிலேயே தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் என குஜராத் பொலிஸார் துப்புக் கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து டில்லி அருகிலுள்ள பரிதாபத் (அரியானா மாநிலம்) நகரில் பதுங்கியிருந்த 4 தீவிரவாதிகளை டில்லிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர். இவர்கள் அனைவரும் 20 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள்.

# கச்சதீவில் இலங்கைக் கடற்படை அட்டூழியம்; தமிழக மீனவரின் படகுகள் வலைகள் நாசம்!

இராமேஸ்வரம், செப். 17

கச்சதீவுக் கடலுக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் படகுகள் மீது இலங்கைக் கடற்படையினர் தங்களது கப்பல்களால் மூர்க்கத்தனமாக - கண்மூடித்தனமாக இடித்து உடைத்தும், வலைகளை அறுத்து நாசப்படுத்தியும், துப்பாக்கியால் படகுகள் மீது சுட்டு மிரட்டியும் அட்டூழியம் செய்தனர்.

தமிழக நாளேடுகளில் இது குறித்து வெளியான தகவல்கள் வருமாறு:

இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் காலை 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கைக் கடற்படையினர் இரண்டு பெரிய கப்பல்களில் அங்கு வந்தனர். அவர்கள் திடீரென்று வானத்தை நோக்கியும், படகுகளை நோக்கியும் துப்பாக்கியால் சுட்டனர்.

சிறிது நேரத்தில் 25 படகுகளை இலங்கைக் கடற்படையினர் சுற்றிவளைத்தனர். தொடர்ந்து அவர்கள் தங்களது கப்பல்களைக் கொண்டு மீனவர்களின் படகுகள் மீது மோதினர். இதில் ஒரு படகு இரு துண்டாக உடைந்தது.

மேலும் கடற்படையினர் மீனவர்களின் படகுகளில் இறங்கி அவர்கள் மீன்பிடிக்க விரித்திருந்த வலைகளை அறுத்து நாசமாக்கினர். பின்பு மீனவர்களைப் பார்த்து ''எங்கள் எல்லைப் பகுதியில் இனிமேல் மீன்பிடிக்கக்கூடாது. மீறினால் உங்களைச் சுட்டு வீழ்த்துவோம்'' என்று எச்சரித்தனர்.

இதையடுத்து உயர் தப்பினால் போதும் என்று அனைத்து மீனவர்களும் உடனே கரை திரும்பினர். இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் பற்றி மீனவர் சங்க நிர்வாகிகள் மற்றும் மற்ற மீனவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இராமேஸ்வரம் கடற்கரையில் ஏராளமான மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் திரண்டு வந்தமையால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

# மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்கள் தாங்கள் நினைத்தபடி செயற்பட முடியாது!

## அரசின் சட்டதிட்டங்களை மதிக்க வேண்டும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, செப். 17

இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற தொண்டுநிறுவனங்கள் இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமையவே பணியாற்ற வேண்டும். தாங்கள் நினைத்தபடி -தங்களின் இச்சைப்படி - எதுவுமே செய்ய முடியாது.

- இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் உரையாற்றிய போது மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளிநாட்டு மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களை வெளியேறக் கோரி இம்மாதம் 8ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பு விடுத்த பின்னர் இந்த அமைப்புகள் தாம் வெளியேறுவதற்கு 3 வார கால அவகாசம் கோரியிருந்தனர். இம்மாதம் 29 ஆம் திகதியுடன் அந்தக் காலவரையறை முடிவடைகின்றது. தற்போது ஐ.நா. அமைப்புகள் உட்பட சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்துவிட்டன. இன்னும் மீதமாக இருக்கும் அமைப்பினர் 29 ஆம் திகதிக்கு முதல் முற்றாக வெளியேறிவிடுவர் என நாம் நம்புகிறோம். அரச சார்பற்ற நிறுவனங்களின் பாதுகாப்பைக்கருத்திற்கொண்டே அரசு இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறது.

வன்னியிலிருந்து வெளியேறும் அமைப்புகள் தொடர்ந்து தங்களுடைய செயற்பாட்டை வவுனியாவிலிருந்து மேற்கொள்ள முடியும். அங்கிருந்து அவர்கள் வன்னி மக்களுக்கான உதவியைச் செய்யலாம்.

இந்நாட்டின் சட்டதிட்டங்களிற்கு அமையவே தொண்டு நிறுவனங்கள் செயற்பட வேண்டும். மாறாக தங்களின் விருப்பப்படி அவர்கள் ஒன்றும் செய்ய முடியாது. - என்றார். (அ-ஒ)

# விதைநெல் திங்களன்று விநியோகிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப், 17


சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட 20 விதைநெல் உற்பத்தியாளர்களுக்கு கடந்த திங்கட்கிழமை விதை நெல் விநியோகிக்கப்பட்டது.

விதைநெல் உற்பத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களான இருபது பேருக்கு தலா இரண்டு ஏக்கர் காணியில் விதைநெல் உற்பத்தி செய்வதற்கு ஒவ்வொருவருக்கு 123 கிலோ வீதம் விநியோகிக்கப்பட்டது.

விதைநெல் உற்பத்தி திட்டத்திற்கும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நிறுவனத்தினர் (Swiss Agency For Development Corporation) 5 மில்லியன் ரூபாவினை 'சிக்கோ' நிறுவனத்தினர் ஊடாக வழங்கியுள்ளது.

சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் ஆ.சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர், விதைநெல் அத்தாட்சிப் படுத்தும் அலுவலர், விவசாய திணைக்கள அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இத் திட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் 100 நெற்செய்கையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-1)



பீஜிங் பராலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான நீளம் பாய்தல் (எவ் 42/44) பிரிவில் ஜப்பான் வீரர் அற்சுஷி யாமாமோரோ பங்குபற்றிய காட்சி.


## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

எமது சக ஆங்கில ஆசிரியர் அருட் சகோதரி எம்.நிதாஞ்சலி
அவர்களின் அன்புத் தாயார்

அமரர் திருமதி மேர்சி கமலம் இராஜசேகரன்

அவர்கள் இறையடி சேர்ந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீரை காணிக்கை ஆக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கலாசாலை சமூகம்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.



## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பி
அனுதாவின் அன்புத் தந்தை

அமரர்

மாரிமுத்து இராசலிங்கம்

அவர்களின் திடீர் மறைவால் நேற்று (16.09.2008) துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

HND-VII மாணவர்கள்
IIS City Campus


# பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் விபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் அனுமதி

மந்திகை, செப், 17

வடமராட்சி புறாப்பொறுக்கியில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற விபத்து ஒன்றில் பல்கலைக்கழக மாணவர் இருவர் காயமடைந்தனர்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த ஜீவானந்தன்(வயது 23), கரவெட்டி, செட்டித் தெருவைச் சேர்ந்த கார்த்தீபன்(வயது 27) ஆகியோரே காயமடைந்தவர்களாவார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள் இருவரும் எதிரே வந்த லொறியும் மோதுண்டதில் விபத்து நிகழ்ந்தது எனத்தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் அம்புலன்ஸ் மூலம் யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.


## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட வெதுப்பக
உரிமையாளர் சங்கத்தின்
சங்கானை, சண்டிலிப்பாய்,
காரைநகர் கிளைத் தலைவர்
இ.சிறிராம் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர் மாரிமுத்து இராசலிங்கம்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் கிளை, அங்கத்தவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு, நெடுந்தீவுக் கரையோரங்களில் நான்கு பெண்களின் சடலங்கள் மீட்பு

## கடந்த வாரம் தமிழகத்திலிருந்து திரும்பியவர்கள் எனச்சந்தேகம்

யாழ்ப்பாணம், செப்.17

நயினாதீவு மற்றும் நெடுந்தீவுக் கடற்கரைப் பகுதிகளில் இருந்து நேற்றும் திங்கட்கிழமையும் நான்கு பெண்களின் சடலங்கள் சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் சம்பவ இடங்களில் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார்.

நெடுந்தீவில் "குயின் ரவர்" பகுதியில் பெண் ஒருவரின் சடலம் நேற்றைய முன்தினம் இரவும் -

நயினாதீவு சல்லி மயானத்துக்கு அருகில் மற்றொரு பெண்ணின் சடலம் நேற்றுக் காலையிலும் -

நயினாதீவு பிடாரி அம்மன் கோயிலடிக்கு சமீபமாக கடற்கரையோரமாக மூன்றாவது பெண்ணின் சடலம் நேற்று நண்பகலும்-

நயினாதீவு வெள்ளைமணல் கடற்கரைப்பகுதியில் நான்காவது பெண்ணின் சடலம் நேற்று காலையிலும்- கரை ஒதுங்கியிருந்தன.

இந்தச் சடலங்களில் உள்பாவாடையும் மேற்சட்டையும்(ஸ்கேட்டும்) மட்டுமே காணப்பட்டன. நகைகளிலும் தோடுகள் மட்டுமே காணப்பட்டன. வேறு எவையும் இல்லை.

சடலங்களை பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பதற்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலங்கள் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதால் விசேட அடையாளங்களைக் கொண்டே இனங்காணமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நெடுந்தீவுக் கரையில் ஒதுங்கிய தமிழகத்தைச் சேர்ந்த ஒருவரின் சடலத்துக்கும் கடந்த இருதினங்கள் கரை ஒதுங்கிய பெண்களின் சடலங்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் -

கரையொதுங்கிய சடலங்கள் கடந்த வாரம் இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் வந்த படகு கவிழ்ந்ததில் மரணமானவர்களுடையதாக இருக்கக்கூடும் என்றும் சந்தேகம் வெளியிடப்படுகிறது. (அ-1)

# அக்கராயன் சண்டையில் 22 இராணுவத்தினர் பலி!

கிளிநொச்சி, செப். 17

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான சண்டை அன்றைய தினம் இரவே முடிவுக்கு வந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள அக்கராயன் பகுதியை நோக்கி முன்நகர்வு நடவடிக்கையை மேற்கொண்ட படையினருக்கு எதிராக தாங்கள் நடத்திய கடுமையான எதிர்த்தாக் குதலில் 22 படையினர் கொல்லப்பட்டும், 63க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தும் இருக்கின்றனர் என புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதல் காரணமாக படையினர் பின்வாங்கிச் சென்றுள்ள அதேவேளை, படையினரின் 4 சடலங்களும், பெருமளவு ஆயுதங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த புலிகள், அது தொடர்பான புகைப்படங்களையும் தமது இணையத்தளங்களில் வெளியிட்டனர்.

எனினும், இம் மோதலில் தமது தரப்பில் ஏற்பட்டுள்ளஇழப்புக்கள்தொடர்பாகவிடுதலைப் புலிகள்தகவல்எதனையும்வெளியிடவில்லை.

இதேவேளை, இந்த மோதல் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட படைத்தரப்பு, இதில் புலிகளுக்கே அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தது. (அ-சி)

## வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கென நிதி சேகரிப்பு

யுத்த சூழல் காரணமாக வன்னிப்பிரதேசத்தில் இடம் பெயர்ந்து அல்லுறும் மக்களுக்கென மன்னார் மாவட்டத்தில் நிதி சேகரிக்கப்பட்டுவருகின்றது.

மன்னார் மறைமாவட்ட சர்வமத அருட் பணிமையம் நிதி சேகரிப்பை மேற் கொண்டு வருகின்றது.

நாளை வியாழக்கிழமை வரை நிதி சேகரிக்கப்படவுள்ளதாக மையத்தின் இயக்குனர் டொ.அலைக் சாண்டர் சில்வா அடிகளார் தெரிவித்துள்ளார். (203)

### கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஷெல்வீச்சு நடத்தப்பட்டமை தொடர்பாக கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்றுக்காலை குறைந்த எண்ணிக்கையான நோயாளர்களே வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வந்தனர் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

### ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பள உயர்ச்சி விவரங்கள் வருமாறு:

| ஆசிரியர்களின் சேவைத்தரம்: | அதிகரிக்கப்பட்ட சம்பளம் |
|---|---|
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | - 750ரூபா |
| பட்டத்துடன் பயிற்றப்பட்டவர் | -1395ரூபா |
| கல்வி டிப்ளோமா பட்டதாரி | - 2040ரூபா |
| முதுகல்வியில் மாணி பட்டம் பெற்றவர் | - 2685ரூபா |
| ஆசிரியர் சேவை 2:I | |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | - 505ரூபா |
| பட்டத்துள் பட்டத்து | - 905ரூபா |
| கல்வி டிப்ளோமா பட்டதாரி | - 1305ரூபா |
| முதுகல்வியியல் மாணி பட்டதாரி | -1705ரூபா |
| ஆசிரியர் சேவை 2:II | |
| பயிற்றப்பட்ட ஆசிரியர் | - 345ரூபா |
| பட்டத்துடன் பயிற்றப்பட்டவர் | - 585ரூபா |
| கல்வி டிப்ளோமா பட்டதாரி | - 825ரூபா |
| முது கல்வியியல் மாணி | - 1065ரூபா |
| ஆசிரியர் சேவை 3:II | - 290ரூபா |

ஆசிரியர் சேவை 3:I - 110ரூபாவில் இருந்து 250ரூபா

#### இலங்கை அதிபர் சேவை

இலங்கை அதிபர் சேவை தரங்களுக்கு தரம் 3, தரம் 2:II, 2 I, தரம் I

ஒரு சம்பள உயர்ச்சி - ஆகக் கூடியது 770ரூபா

### புலிகளை அழித்தே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசின் நிவாரண உதவி அதிகாரிகளும் மருத்துவர்களும் செயற்படுகின்றனர். கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள மக்கள் அந்தப் பகுதிக்கு வரலாம்.

விடுதலைப் புலிகள் காடுகளுக்குள் பின்வாங்கி அங்கிருந்து கெரில்லா யுத்தத்தில் ஈடுபட முடியாது. புலிகளை முற்றாக அழிக்க முடியும். அவர்கள் தற்போது காடுகளிலேயே உள்ளனர். எமது படைகளும் காடுகளிலேயே உள்ளன.

விடுதலைப் புலிகளை முற்றாக அழித் தொழிப்போம். எனினும் நான் அதற்கான கால எல்லையை நிர்ணயிக்க விரும்பவில்லை. புலிகளை அழிப்பது சாத்தியம். எனினும் நிச்சயமாக அதற்கு சில காலமெடுக்கும்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் சில உறுப்பினர்கள் எஞ்சக்கூடும்.

விடுதலைப் புலிகளுடன் இன்னுமொரு யுத்த நிறுத்தத்திற்கான சாத்தியக்கூறினை நான் நிராகரிக்கிறேன். விடுதலைப் புலிகளின் தலைவர் தனது ஆயுதங்களுடன் அரசிடம் சரணடைந்த பின்னரே பேச்‌ ள் சாத்தியமாகலாம்.

விடுதலைப் புலிகள் சரணடைய அனுமதிக்கப்படுவார்கள். எனினும், அவர்களுடன் மற்றுமொரு யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்வது குறித்த பேச்சக்கு இடமில்லை.

புலிகளுடன் எதிர்காலத்தில் பேச்சகளை மேற்கொள்ளலாம் என நாங்கள் கருதவில்லை. அதற்கான தேவையில்லை.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிப்பதை விடுத்து, இலங்கைக்கு திரும்பி ஜனநாயக நீரோட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும்.

பிரபாகரனும் பொட்டு அம்மானும் தமது ஆயுதங்களுடன் சரணடைய வேண்டும். அவர்கள் ஆயுதங்களுடன் மீண்டும் தலைதூக்க அனுமதியளிக்க மாட்டேன்.

பிரபாகரனை உயிருடன் பிடித்தால் நான் அவரை இந்தியாவிற்கு அனுப்புவேன். எனினும், தற்போது அவர் எங்கு இருக்கின்றார் என்பது தெரியாது. என்றார் ஜனாதிபதி. (அ-சி)

### பஸ்ஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேறியதால் பாரிய உயிர் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

குறிப்பிட்ட பஸ்ஸில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குண்டு வெடித்த வேளை அவ்வழியால் வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த நபர் ஒருவர் காயமடைந்தார். அவர் கொழும்பு தேசிய மருந்துமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலும் மூவர் குண்டு வெடிப்புச் சத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பஸ் சென் பிரிஜெட் கொன்வன்ட்டிற்கு அருகில் சென்றுகொண்டிருந்த வேளை ஆசனம் ஒன்றுக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான பொதியொன்று அவதானிக்கப்பட்டதாகவும் - உடனடியாக பயணிகளை பஸ்ஸிலிருந்து இறக்குமாறு தாம் கூறினார் என்றும் குறித்த பஸ்ஸின் நடத்துனரான மஞ்சுள உதயங்க தெரிவித்துள்ளார்.

### சுழிபுரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு நின்றவர்களை நோக்கி சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார். சுழிபுரத்தைச் சேர்ந்த அ.விஷ்ணுவரதன் (வயது - 33) என்பவர் சூடுபட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார். வெதுப்பகத்தின் உரிமையாளரான தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த மா. இராஜலிங்கம் என்பவர் காயத்துடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

இருவரது சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன. (அ-சி)

### புதுக்குடியிருப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பகுதியிலும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணியளவில் அரசவான்படையின் கிபீர் ரக விமானங்கள் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதல்களின்போது புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தில் இருந்து உடையார் கட்டுக்குத்தனது உறவினர் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த க. இராஜேஸ்வரி (வயது - 52) என்பவரும், ஆனந்தபுரத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ணான அந்தோனிப்பிள்ளை மரியசீலி (வயது - 45) என்பவரும் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வான்படையினரின் குண்டுத் தாக்குதலில் குடியிருப்புக்கள் சிலவும், மக்களின் பயன்தரு மரங்கள் பலவும் அழிவடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-சி)

### மனிதாபிமானத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் கோரப்பட்டிருந்தது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் வன்னியிலிருந்து வெளியேறியதை உறுதி செய்துள்ள இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் பேச்சாளர் கோர்டென் வெய்ஸ் வன்னியிலிருந்து தமது விலகல் தற்காலிகமானதாக இருக்கும் என் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளதுடன் அங்குள்ள மக்களை மீண்டும் சென்றடைவது குறித்து தாங்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார்.

வன்னியில் தற்போது செயற்படுவது கடினமாக உள்ளதாகவும் தமது நடவடிக்கைகள் மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### முறிகண்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறிகண்டிப் பகுதியில் வசிக்கும் இடம் பெயர்ந்த மக்கள் தமது குடிசைகளை வேறொரு இடத்திற்குச் செல்வதற்காக அகற்றிக்கொண்டிருந்த சமயமே இவ் விமானத்தாக்குதலுக்கு இலக்காகினர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

வன்னிப் பெருநிலப்பரப்பை பேரிரைச்சலுடன் வட்டமிட்ட ஆறு தாக்குதல் விமானங்களும் முறிகண்டி, உடையார்கட்டு மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகள் மீது குண்டுகளை கொட்டித் தீர்த்தன என்று பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

விமானத் தாக்குதலில் பலியா பொது மக்களின் பெயர் விவரம் வருமாறு:

பாண்டியன் குளத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை திலீபன் (வயது - 17), செல்வபுரம் பாண்டியன் குளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஜெனார்த்தனன் (வயத - 60) பாண்டியன் குளத்தைச் சேர்ந்த தங்கராசா ஜெயசீலன் (வயது - 22) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவார்.

நேற்றைய தினம் காலை 6.30 மணியளவில் புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் உயர்தொழில்நுட்ப தளம் மீது தமது ஜெற் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்றும், அதற்கு 10 நிமிடங்களின் பின்னர் உடையார்கட்டுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் இடைத்தங்கல் முகாம் மீது ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின என்றும் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. (சி)

Microsoft Certified
Systems Engineer / Administrator
* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 18.09.2008 08.00AM
Become an Engineer
விபரங்கள் தேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

நியூ பிறைற் (யா/மாட்டின் வீதி)
இரசாயனவியல்
By:- M.J.Uthayan(B.Sc.Ed)
* அசேதன இரசாயனம் *
A/L 2009 & 2010
பிரிவு 1-திங்கள்(2.30-3.30)
பிரிவு 2-வியாழன்(2.30-3.30)
* இரசாயனச் சமநிலை *
A/L 2009
செவ்வாய்,வியாழன்(காலை 6.30-7.30)
* பொது இரசாயனம் *
A/L 2010
புதன்,வெள்ளி(காலை 6.30-7.30)
அனுமதி

Paper Class
பொருளியல் திரு.சண்
வணிகக்கல்வி திரு.யசோ
ஆரம்பம் 18/09/2008 வியாழன் 3.pm 4.pm
* எல்லா மாணவரும் அனுமதி பெறலாம்.
* இம் மாதக் கட்டணம் இல்லை.

தேவை
பிரபல கணனி நிறுவனம் ஒன்றிற்கு Ms Office, Accounting Package, Hardware தெரிந்தவர்கள் தேவை. 25ம் திகதிக்குமுன் கிடைக்கக் கூடிய வாறு சுயவிபரக் கோவையினை அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல-3143
மே/பா.உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.